அன்பளிப்பு
திருமதி : கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை 600 028.

ஜோதிம[illegible]

இரஞ்சித போதினி

1924ஶு மாசிமீ முதல் 1925ஶு தைமீ

வரையிலும்.

ஆசிரியர் :

தமிழ்பூஷணம் வாசுதேவ ராவ் கேய்க்வார் அவர்கள்

எம். சம்பந்த முதலியார் அவர்களால்

சென்னை :

மாணிக்க விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

ஜோதிமயம்.

இரஞ்சித போதினி இரண்டாம் தொகுதியின் விஷயக் குறிப்பு அட்டவணை.

விஷயங்கள்	பக்கங்கள்.
கடவுள் வணக்கம்	1.41. 81, 121, 161, 201. 241 281, 321, 361, 401, 441
நமது பத்திரிகை	3
காரைக்காலம்மையார் புராணம்	4,44, 86, 124, 204, 246. 410 452
உருத்திராக்கம் பூணவேண்டியது அவசியமே.	7, 50, 87, 126
ஆண்மாவே புத்திரன் அல்லது உயிரே மக்களாவார்	8, 61, 93. 130, 169, 232.
நீலமோதிரம்	11
மதனசுந்தரி அல்லது மர்மக் கொலைகள்	12, 59. 95, 34, 177
திருச்செந்தில்வளர் சிவன்போற்றிப் பதிகம்	13, 108
சங்குபாலகன்	15, 67, 100, 132, 182, 223, 274, 312, 351, 393
பாக்கியரத்னம்	17
ஆனந்த சுந்தரி அல்லது அதிர்ஷ்டத்தின் ஆர்பாட்டம்	18, 46
இரணங்க சூரன் அல்லது வலைஞன் வையகம் ஆண்ட விநோதம்	20
இரஞ்சிதரத்னமாலை	22, 187, 266, 301, 334, 376
அருளுடைமை	24
இரஞ்சிதனின் இரண்டாமாண்டின் வாழ்த்து	25
வாழ்த்துப்பா	26
நற்சாட்சிப் பத்திரங்கள்	26, 66, 195, 300, 398
ஓர் விஞ்ஞாபனம்	28, 381
பரோபகாரம்	29
சுலோசனை	31, 78, 158. 433, 473, 476
மிருகாவதி	34, 76, 115, 237, 317, 353
மார்க்கண்டன்	36, 73
இரஞ்சிதபோதினி 2-வது மலரின் ஓர் வேண்டுகோள்	38
விநோத விஷயங்கள்	39, 79, 119
காந்தியடிகளின் விடுதலை	40

விஷயங்கள்	பக்கங்கள்.
தேவை	43
கடிதம்	49 429
பார்த்திப சிவபக்தி	52, 90, 127, 167, 206
ஒரு ஆச்சரியமான சம்பவம்	55
மாந்தரைக் கெடுப்பது மதுவே	64, 220, 272
நித்திரை	71
நமக்கு வேண்டியதென்ன ?	83
பாணாசூரன்	97
இல்லற தர்மம்	103, 137
சிறுவர்க்கான பக்கங்கள்	105, 156, 192
முயற்சி	109
இரத்தினாம்பாள் அல்லது தற்கொலை புரியத் துணிந்த தையல்	111
இனியவை கூறல்	113
கலிகால விநோதங்கள்	118
செத்துப் பிழைத்தவன் கதை	119
பஞ்சாங்கம்	120, 160, 200, 240, 280, 319, 320, 360, 400, 440, 480
தற்கால தேவையும் நீடிய வாழ்வும்	122
பழைய நாள் நினைவு	136
பழையனூர் நீலி வரலாறு	141
மல்லிகைப்பூ	143
ஹடயோகம் அல்லது பிடிவாதம் (விடாமுயற்சி)	145
அயல்மனை விரும்பேல்	148
வைகறைத்துயிலெழு	149
கல்வி	150, 396
காதலால் துக்கமுண்டு ஈஸ்வரியால் நன்மை யடைந்த சாந்தவதி	154, 196, 225, 314, 418, 475
பத்திரிகை வாசிப்பதினால் பயனென்ன ?	162
சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்	164, 408
சூது	171
இராமச்சந்திரன் காலேஜுக்குச் செல்வதைப்பற்றி நிகழ்ந்த ஆக்ஷேபனை ஸமாதானங்கள் அல்லது பகவத்கீதோபதேசம்	172, 234, 248, 290, 326, 363, 404, 447
மதுவிலக்கு	175
ஓர் விண்ணப்பம்	180

விஷயங்கள்	பக்கங்கள்.
விபூதி	184, 228, 269
தொழிலில் துர் அபிமான கண்டனம்	189
பொறுமை	190
விவசாயத்தின் விதிகள்	199
நமது நாட்டின் முன்னேற்றம்	202
கதர்	207
ஸ்நேஹாதரத்வம்	211
ஆறுவதுசினம்-இருவர்கருத்து1&2	214
கற்பு	219, 346, 370
பெண்கல்வி	222
செய்நன்றி யறிதல்	260
சந்தாநேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்	241
ஸ்வராஜ்ய சூக்ஷ்மம்	242, 282, 322, 362, 402, 443
கடமையும் அதை நிறைவேற்றுதலும்	257
விக்ரஹ ஆராதனே	253
இரஞ்சிதனே வாழ்த்தி வினவல்	255
கொடிய குணங்கள்	256
உபதேச ரத்னமாலா	259, 303, 349
சூதுவிரும்பேல்	260
ஏழைகள் குடியிருப்பதற்கு வீடுகள் நிர்மாணித்தல	261
ஜீவகாருண்யம்	264, 356
வேலாயுதக் கன்னி	276, 399
தருமம்	277, 308, 358, 463
ஜீவாத்மாவும் பரமாத்மாவும்	292
வறுமை	295
மனிதமூலராசி	297
ஓர் கடிதம்	300
ஆலயம் தொழுவது சாலவும்நன்று	305
அன்னதானம்	311, 387
நட்பு	329
ஸ்ரீ பழனியாண்டி திருவருட் பாசுர வந்தாதி	330, 367, 454
காலம்	332
இரஞ்சிதபோதினியின்வாழ்த்து	333
லீலாசுகர் சரித்திரம்	336
கல்வியும் செல்வமும் (கட்டுரைச் சொற்கள்)	339

விஷயங்கள்	பக்கங்கள்.
இரஞ்சிதனின் மனோசக்தியைப் புகழ்தல்	340
நல்லொழுக்கம்	340
புலர் லுண்ணல்	343
நம் நாட்டுப் பெண்மணிகள்	373
முக்கியமான பழமொழிகள்	375
மானிட அவஸ்தை	378
பெருமை	380
நீதிவிஜயம்	382, 436, 458
பெற்றோர் பக்தி	386
தனிப்பாடல்கள்	390
எனது கடிதம்	391
பத்திரிகை	413
தேசபக்தியுள்ள ஓர் பெண்மணி	413
காவிரி விரிகோலம் அல்லது கலிகாலக்கொடுமை	415
நமது பெண்களின் கடமை	421
முதற்பாவம்	422
சிவபெருமானது இருபத்தைந்து திருமூர்த்தங்களது வணக்கம்	423
பெரியோர்களின் உபதேசம்	425
இரஞ்சிதனின் நன்றி	427
விண்ணப்பம்	428
அபிப்பிராயம்	429
இரஞ்சிதன் நண்பர்களுக்கோர் விஞ்ஞாபனம்	429 442
மாந்தரும் சட்டமும்	430
மருந்துவாழ் மலை மகிமை	431
முத்தமிழ் க்ஷேத்திரம் பொது செய்திகள்	435
தற்கால மாந்தர்கள்	438, 466
சப்தரிஷி வெண்பா	439
பகவத்கீதாசாரம்	456
திருஷ்டாந்த வாக்கியங்கள்	459
ஓர் கருத்து	462
விண்ணப்பக் கடிதம்	466
தந்தை தாய்ப்பேண்	468
ஜனபாயி சரித்திரம்	471
மதிப்புரை	479

உ

ஜோதிமயம்.

ரஞ்சித போதினி

கதை, காவ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிஹாசம்,
அநுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு வெளிவரும்
ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர்: தமிழ்ப்பூஷணம் ஸ்ரீமான் - வீ. ஆர். கேய்க்வார்.

தொகுதி 2	ருத்ரோத்காரி௵ மாசி௴ 1924௵ பிப்ரவரி௴	பகுதி 1

கடவுள் வணக்கம்.

நன்று அருள் உதவும் ஐங்கரன் துணைவனை
　நனிபனி மலைமகள் மகனைக் குகனை
மன்றின் உள் ஆடிய கொன்றை சடைமுடி
　மன்னன் உவப்பு உறுபொன் அம் குழவியை
கன்று குருந்து அடி ஆவிளவு எறிதரு
　கண்ணன் மருகனை யெண்ணும் துணையைக்
குன்று தோறும் ஆடிய போரூர் இறையைக்
　கூவாய் வர நீ கூவாய் குயிலே.

(இ-ள்). பக்தர்க்கு நன்மையை விரைந்து அருளும் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக் கடவுளின் சகோதரனை, மலையரசன் மகளும், மஹா மேன்மையை யுடையவளுமான உமாதேவியின் புத்திரனை, அன்பர்களின் இருதயமெனும் குகையினுள் நீங்காது வசிக்கும் நின்மலனை, பொன்னம்பலத்தின்கண் ஆனந்த நடனம் புரி

பவரும், கொன்றைமலர் மாலைபைச்சூடிய சடா மகுடத்தினையுடைய வருமான இறைவன் மகிழ்ச்சிகொள்ளும் பொன்போன்ற செங்கிறச் செல்வனை, கன்றினை குறுந்தடியாகக்கொண்டு விளங்கனியெறிந்து அசுரரிடர்போக்கிய ஸ்ரீய:பதியாகிய நாராயணனது மருகனை, அன்பர்கள் நினைக்குந்தோறும் துணையாய் உள்ளவனை, ஆறு திருப்படை வீடுகளேயன்றிக் குன்றுகள்தோறும் விளையாடியருளுபவரும் திருப்போரூரென்னுந் தலத்தில் எழுந்தருளி யிருப்பவருமான முருகக்கடவுளை, குயிலே நீ வரும்படியாகக் கூவுவாய்.

ஐங்கரங்களையுடைய விநாயகக் கடவுள் துழாவுந் தொழில் அமைந்த துதிக்கையில் மக்கள் பிறப்பினருள் சத்தினிபாதத்து உத்தமரைக் கைக்கொண்டும், அவரது பாசத்தை யொழிக்க அன்பைப் பாசமேந்திய திருகரத்தினி லேற்றும், அவரது தற்போதத்தை அங்குசமேந்திய திருக்கரத்தால் தோன்றுவாறு குன்றச்செய்தும், ஆணவ சக்திகுன்றிய அவர்க்குக் கனியையேந்திய திருக்கரத்தால் வேதக் கனியை யளித்தும், அருளுதல் என்பது அருளின் நன்மை யென்பதனை நன்று அருள் உதவும் எனவும், அவ்வேதத்திற்குப் பொருளுரைக்கும் முருகன் ஐங்கரனுக்கு இளையோன் என்பதனை எண்ணுந் துணைவனை எனவும்; வேதப்பொருளாகிய சிவதத்துவத்தை தியானிக்கின்ற அடியவர்களுக்குவரும் இடையூறுகளைப் போக்குவார் என்பதனை எண்ணுந் துணையையெனவும்; திருப்பரங்குன்றம் ஆதியாக உள்ள ஆறுபடை வீடுகளைக் கொண்டருளும் அவ்விறைவன் அடியார்வேண்டி ஆங்கு அருளும் இயல்பினன் என்பதனை குன்றுதோறு மாடிய போரூர் இறையை யெனவும்; உலகம் நீறின்றியமையாது அந்நீரும் மேகமின்றியமையாது அற்றாகலின் அந்நீருடைய மேகம் வருதலை முன்னர் உணர்த்துதல் குயிலின்குரல் என்பதனைக் குயிலே யெனவும், குயில் உலகினைக்காக்கும் நீருண்டமேகத்தைச் செய்மைக்கண் கண்டபோதே கூவுந்தொழிலுடையதாதலால் யான் பிறவி வெப்பம் ஒழிய திருப்போரூரில் எழுந்தருளியிருக்கும் அருள்மேகத்தைக் காணப்பெறாது சோர்கின்றேன். நீ கண்டு வரக் கூவுவாயின் உயிர் வாழ்வேன் என்பதனை நீ வரக் கூவாயெனவும் கூறினர்.

கூவாய் கூவாய் என்ற அடுக்கு விரைவுபற்றி அன்றியும் என்னு கங்குளிர எனவும் என் உள்ளம் குளிர எனவும் பொருள் கொள்ளுதலும் ஒன்றாகும்.

பத்திரிகாசிரியர்.

ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

சென்னை, ருத்ரோத்காரி௵ தை௴

1924௵ ஜனவரி௴

நமது பத்திரிகை.

நமது இரஞ்சிதனுக்கு முதலாண்டு பூர்த்தியாகி இறைவன்றிருவருளால் இரண்டாம் ஆண்டும் ஜனித்து முதற்றிங்கள் குழவியாகி யாவர்பாலும் உலவும் தன்மையும் பெற்ருன். இவ்விரண்டாமாண்டு பூரணமான சுகத்தோடும் சந்தோஷத்தோடும் பூர்த்தியெய்துமாறும், ரஞ்சிதன்மேலும் மேலும் அபிவிருத்தியெய்துமாறும், பல விஷயங்களைப் புனைந்துகொண்டு வருமாறும், தற்போதுள்ள நமது நண்பர்கள் பலரும் தங்கள் சந்தாவைச்செலுத்தி யாதரிப்பதோடு, தங்கள் சகாக்களையும் சந்தாதாரராகச் சேர்த்து அனுப்புவதோடு நமது ரஞ்சிதனின் முன்னேற்றத்தைப்பற்றி முயற்சியெடுத்துக்கொள்ளுமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நிற்க, கடந்த ஆண்டினில் நமது ரஞ்சிதன் பற்பல விஷயங்களைப்புனைந்து மிகுந்த, பிரகாசத்துடன் நண்பர் பலரும் பற்பல உயர்தர வியாசங்களை யெழுதிவந்தனர். இன்னும் எழுதியும் வருகின்றனர். நமது ரஞ்சிதன் தன்னுலும் சுமக்க முடியாதபடியான அவ்வளவு வியாசங்களும், கட்டுரைகளும், நவீனங்களும், நாடகங்களும், கதைகளும், காவ்யங்களும் இன்னும் வந்துகொண்டே யிருக்கின்றனவென்பதை யோர்ந்து 40-பக்கங்கொண்ட சஞ்சிகையாம் இதனின் இடவிசாலத்தைச் சுருக்கி யதிக விஷயமே கொள்ளுமாறு செய்து வந்தோம். இனியும் நமது ரஞ்சிதன் அதிகமான பக்கங்களோடு வெளிப்படுவானுவெனின் 'அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சாம்' என்னும் தன்மைபோல் மிகக் குறைந்த சந்தாவில் மீண்டும் பக்கங்கள் அதிகப்படாதெனினும், இம்மதியிலிருந்து விசேஷமானதும் உயர்வினை யுடையதுமான முதற்றரவியாசங்களே பிரசுரிக்க வெண்ணியிருப்பதால் இனி பல நல் விஷயங்களை நமது போதினி போதிக்குமென்பதைப் பலருக்கும் மிக்கப் பிரியமுடன் விளக்குகின்ரும்.

நேயர்களே! பத்திரிகைத் தொழில் மற்றத் தொழில்களைப் போன்ற தொன்றன்று. இத்தொழில் நடத்துவது மிக்கக் கடினமெனினும் ஏராளமான, வருவாய் உடையவர்க்கே இது நடத்துந்தன்மைய தாகுமெனினும், சுயநலம் ஒழித்துப் பிறநலங்கருதி, இவ்வளவு குறைந்த சந்தாவில் பத்திரிகை நடத்துவதெனின், இது இன்னும் எத்தகைய கஷ்டமென்பதை யாம் கூறவும், வேண்டுமோ?

தற்காலம் பத்திரிகைத் தொழில் பலரால் நடத்தப்பட்டு வருகின்ற தெனினும், நேர்பட மாதந்தோறும் வெளிவருவது சிறிது கஷ்டசாத்தியமே. கடந்த ஆண்டில் நமது பத்திரிகையை பிரதி ஆங்கிலமாதக் கடைசியிலும் அடுத்தமாத முதல் தேதியிலும் அனுப்பிவந்த சமயம் நமக்குச் சில சந்தா நேயர்களிடமிருந்து வந்த புகார் கடிதங்கள் பல. தற்காலத்தில் எத்தனையோ பத்திரிகைகள் இரண்டுமாதத்திற் கொருமுறையும் மூன்றுமாதத்திற் கோர்முறையும், வெளிவருகின்ற தென்பதை நாம் கூறவும் வேண்டுமோ? அங்ஙனமின்றி காலக்கிரமமாயும், நல்விஷயங்க ளுடையதாயும், உயர்ந்த கடிதப் பதிப்பாயும் பிரசுரிக்கத் தொடங்கிய நமக்கு என்றும் குன்று ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்குந் தன்மையில் நமது மித்திரக் குழாங்கள் தத்தம் நண்பர்களையும், மற்றவர்களையும் சந்தாதாரராகச் சேர்த்து உதவி புரிந்து வரவேண்டுமாய் விரும்புவதோடு உலகம் சுகமே வாழ எல்லாம் வல்ல இறைவனை யிறைஞ்சுதும். ஓம் தத் ஸத்.

பூதவதி அல்லது புனிதவதி
என்னும்
காரைக்காலம்மையார் புராணம்.

(தொகுதி 1 பகுதி 12-ல் 433-ம் பக்கத் தொடர்ச்சி).

17. கணவன்முன் வரவிடுத்த கனியிரண்டுங் கைக்கொண்டு
மணமலியு மலர்க் கூந்தன் மாதரார் வைத்ததற்பின்
பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்ட
ருணவின்மிகு வேட்கையினு லொருவர்மனை யுட்புகுந்தார்.

(இ-ள்). புருஷனாகிய பரமதத்த செட்டியார் கொடுத்தனுப்பிய மாங்கனிகள் இரண்டையும் வரப்பெற்று மிகுந்த மலர்மணம் வீசும் கூந்தலினையுடையவளும் மாதர்களுக்குள் மிகுந்தவளுமாகிய அம்மையார் வைத்தபின் படத்தினையுடைய சர்ப்பங்களை யாபரணமாக அணியக்கூடியவரான பரமசிவனுருடைய தொண்டர் ஒருவர் பசியின் கொடுமையைச் சகிக்க வியலாதவராய் அவ்வீட்டினுள் நுழைந்தார். பசியின் கொடுமையைக் கூறுங்கால்

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர் மேற்கா முறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்" 104 எனவும்,

104 நல்வழி.

"கொழுந்து விட்டெரியு முத்தழல் வளர்க்குங்
கோதிலா முனிவநஞ் சிறுர்க
ளழுந்து பட்டேங்க வெழும்பசி யொழிக்க
வனமிலா துயங்கின ரந்தோ
......................................" 105 எனவும்,

பசிப்பிணியைக் கூறியதோடு பசியினல் வருந்திய தன்மையைக் கீழ்க் கண்டவாறு,

" ஒருமகவுங் களித்திடும்போ தொருமகவு கைநீட்டு
முந்திமேல் வீழ்ந்து
இருமகவுங் கைநீட்டு மும்மகவுங் கைநீட்டு
மெண்செய் வாளால்
பொருமியொரு மகவழுங் கண்பிசைந் தழுமற் றொருமகவு
புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெவ் வனஞ் சகிப்பாள்
பெரிது பாலம்" 106 என்றும்,

" அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென
வழுமா லோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக் கன்னுயெனப்
பொய்செப்பு மோர்சேய்
முந்தார்வத் தொருசேய் மிசையப்புகும் போதினில
ஒருசேய் முடிகியீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச் சிந்துதற்கு
நயக்கு மோர்சேய்" 107 எனவும்,

பசியின் கொடுமையைக் கூறினுராதலின் இவ்வடியாரும் மிகுந்த பசி மேலிட்டவராய் தம் பசிப்பிணியைப் போக்குவது கருதி அம்மையாரின் கிருகத்துள் பிரவேசித்தார்.

18. வேதங்கண் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன் றனடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார்.

(இ-ள்). வேதங்களைத் திருவாயினுலுரைத்த பெருமானுகிய பரமசிவனுாது உண்மை பக்தரின் பரிதாப நிலைமையினைக்கண்டு நாத ஸ்வரூபியாகிய அடியாருடைய பசியினைத்தீர்ப்பேன் என்று முன்சென்று பாதங்களை சுத்தஞ்செய்வதற்காக ஜலங் கொண்டுவந்து கொடுத்து இலைபோட்டு துன்பத்தையொழிக்கக் கூடியவராய் அடியவரை நல்ல விருந்தினராக அவருக்கு இனிமையான உணவை யூட்டுவதற்கு முற்படுவராயினர். இதில் வேதங்கள் மொழிந்தபிரான் என்பதை,

105, 106, 107 குசேலோபாக்யாணம்.

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப்பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுழற்தரு தமிழ்த் தெய்வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்''
108 என்றும்,

"வேதமே முதலாயுள்ள வியன்கலை யனைத்துந் தொன்று
ளோதினு னவனே யெங்கட் குரைத்திட உணர்ந்தா மன்றே
யீதுநீ யவற்றிற் காண்டி யாருமொன் றுகக் கொண்டால்
பேதையோ பெரிது மென்னப் பிதாமக னினைய சொற்றான்'' 109
[என்றும்,

"ஆதி யானை யமரர் தொழப்படு
நீதி யானை நியம நெறிகளை
யோதி யானை யுணர்தற் கரியதோர்
சோதி யானைக் கண்டீர் தொழற் பாலதே'' 110 என்றும்,

"ஓதித் தொருநூ லுமில்லை போலுங்
முரைப் படாததொன் றில்லை போலுங்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங்
கவலைப் பிறப்பிடும்மை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்
விடஞ்சூழ்ந் திருண்ட மிடற்றர் போலு
மாதிக் களவாகி நின்றார் போலு
மாக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே'' 111 என்றும்,

இஃதல்லாமல் வேதங்களால் துதிக்கப்பட்டவரெனும் உண்மை இதனுள் விளங்குகின்ற தென்பதையும் ஒரு பொருளாகக் கொண்டு கூறுமிடத்து:

"மறைமுதல் கலைக ளெல்லா மணிமிடற் றவனே யெங்கு
நிறைபர மென்றும் பூதி சாதன நெறிவீ டென்று
மறைகுவ தறிந்துந் தேறு ரறிவெனக் கலங்கியந்த
முறையின்வீ டுணர்ந்தோர் போலத் தெளிந்தது மாரி வெள்ளம்'' 112

என்றும் கூறப்படுவதனுல் வேதங்கள் மொழிந்தவரும், வேதங்களால் மொழியப்பட்ட பிரானுருமான சாக்ஷாத் சிவபிரானுரது உண்மை பக்தரின் நிலைமையினைக் கூறுவது கருதிய புராணிகர் மெய்த் தொண்டர் நிலையென்றதை,

"ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
றானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன்'' 113 என்றும்,

---

108 சீகாளத்தி புராணம். 109 கந்தபுராணம். 110, 111 தேவாரம். 112 திருவிளையாடல் புராணம். 113 சிலப்பதிகாரம்

"அணங்கர வுரித்ததோ லணிய மேனியன்
வணங்குநோன் சிலையென வளைந்த யாக்கையன்
பிணங்குநூன் மார்பினன் பெரிதோர் புத்தக
முணர்ந்துழுப் பெழுதின தொப்பத் தோன்றினன்" 114 என்றும்,

சேக்கிழார் மெய்த்தொண்டரென்று கூறினரேனும், தலபுராணத்துள் சிவபெருமானே அடியவர் உருக்கொண்டு எழுந்தருளினரெனக் காணப்படுகின்றதும் கவனிக்கற்பாலதேயாம். (தொடரும்).

வி. ஆர். கேய்க்வார்.

உருத்ராக்கம் பூணவேண்டிய தவசியமே.

சைவசமயத் தந்தைமார்களே !

நமது பிதாவாகிய பரமகருணாநிதியின் திருநோக்கத்திற் கிடையூரின்றி, நாம் நடந்து கொண்டாலல்லவா அன்னவர் மனம் திருப்தியடையும், அவருக்கு எந்த காரியத்தில் பிரியமோ, அந்த காரியத்தை நாம் நடத்தலும்; அன்னவர்க்கெது கூடாதோ அவற்றை நீக்கலுமே நம்முடைய கடமையன்றோ ஒவ்வொரு மதக்கோட்பாடும் கடவுளுக்குப் பிரியமானதைச் செய்யவும் பிரியமற்றதை நீக்கவும் வேண்டுமென்றே சொல்லப்படுகிறது. குபேரனவர் கடவுளின் கருத்திற் கிணங்கினவ ராகையால் அவரைக் கடவுளுக்குச் சிநேகரென்று கூறப்படுகிறது.

எம்பெருமானின் கருத்தோ நாம் நாடோறும் அவரை மறவாதிருப்பதும், துதிப்பதுந்தான் முக்கியகடமை. அப்படித் துதிக்கின்ற நம்முடைய பாவங்களை நிவர்த்திக்கும் பொருட்டு ருத்ராக்கம் அணியவேண்டிய தவசியமே.

உபநிஷத்துக்களால் சொல்லப்பட்டதும், அநாதியாகப் பெரியோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதும்; அநேக சத் புராணங்களாலே பிரகாசம் செய்யப்பட்ட மகிமைகளையுடையதுமான ருத்ராக்ஷமாலையின் தாரணமானது, வெகு ஜென்மங்களிற் செய்யப்பட்ட புண்யங்களையுடைய தர்மவிர்த்தி யொன்றிலேயே விருப்பமுடையவர்களால் தான் சுலபமாக அடையத் தகுந்தது.

பெரிதான ஜாபாலோபநிஷத்தானது ருத்ராக்ஷமாலையின் தாரணத்தைச் சொல்லுகிறது. சைவமான ஸ்காந்தபுராண முக்கிய வசனங்கள் அந்தத் தாரணத்தை அவசியமென்று சொல்லுகின்றன. ஸ்ரீமத் சங்கராசாரியர் முதலியவர்கள் தங்களால் செய்யப்பட்ட ஆசார வசனங்களால் அந்த தாரணத்தை, புண்ணியம், சிரத்தை இவைகளால் இவ்விதம் போதிக்கிறார்கள்.

---

114 சிவகசிந்தாமணி.

பூசுண்டரானவர் யெம்பெருமானை நோக்கி ருத்ராக்கம் எப்படி உண்டாயிற்று. அணிவதாற் பலனென்னவெனக்கேட்க, கருணாகர மூர்த்தியானவர் சொன்னதாவது.

பூர்வத்தில் திரிபுரத்தை சம்ஹரிப்பதற்கு நான் கண்ணைமூடினேன். அவைகளிலிருந்து ஜலத்துளிகள் பூமியில் விழுந்தன. சகலருக்கும் அனுக்ரகம் செய்வதின் பொருட்டு அவைகள் ருத்ராக்ஷங்களாயின.

அவைகளின் பெயரைச் சொல்லுகிறவர்கள் பத்துப் பசுக்களைத் தானங்கொடுத்தவரடையும் பலனை அடைகிறார்கள். அவற்றை யணிந்தவர்கள் இருபது பசுக்களைத் தானம்செய்தவரடையும் பலனையடைகிறார்கள். தொட்டாலோமுப்பது பசுக்களைத் தானம்செய்தவரடை பலனை அடைகிறார்களென்று கூறினதாக சாஸ்திரங்களில் காணப்படுகிறது.

எதிரிலிருந்து உண்டாயின பெயரென்ன வென்று பூசுண்டர் கேழ்க்குங்கால் யெம்பெருமான் சொன்னதாவது--நான் ஆயிரந்திவ்ய வருஷங்கள் கண்ணைமூடினேன், இரண்டு அழகான ஜலத்துளிகள் விழுந்தன. அந்தக் கண்ணீர்த் துளிகள் பக்தர்களுக்கு அனுக்ரகம் செய்யவேண்டுமென்ற காரணத்தால் ஸ்தாவரமா யிருக்குந் தன்மையை யடைந்து பெரிதான ருத்ராக்ஷ மரங்களாயின.

பக்தியுடன் நாம் தரித்துக் கொள்வோமாயின், நாம் பகலில் செய்த பாவத்தை இராத்திரியில் போக்கடிக்கும். இராத்திரியில் செய்தபாவத்தைப் பகலில் போக்கடிக்கும். (தொடரும்).

A. S. T. மஹாராஜ், திரவியபட்டணம்.

ஆன்மாவே புத்ரன்

அல்லது

உயிரே மக்களாவர்.

"ஆத்மாவை புத்ரா நாமாஸி" (ஆன்மாவே புத்ரன்) என்றும், "புன்னும்நா நரகாத்ராயத யிதிபுத்ர:" (புத் என்ற நரகத்தினின்றும் விடுவிப்பவனே புத்ரன்) என்றும் இரண்டு வாக்கியங்கள் வழங்கிவருகின்றன. புத்திரனில்லாதவருக்கு கதியில்லை யென்றேற்படுகின்றதல்லவா? மாதாபிதாக்களை நற்கதியாய் கரையேற்றுவதற்கு புத்ரனே முக்யசாதனமாகின்றான். பித்ருபுத்ராள் ஒருமைப்பட்டு ஒருவரையொருவர் உயிரென மதித்தொழுகி வரவேண்டுவது இயல்பாம். ராமச்சந்திரனிடம் உயிருக்குயிராயிருந்த தசரதர் அவர் தம்பி லக்ஷ்மணருடனும் ஜானகியுடனும் கானேக்கிச்செல்லவே உயிரைத் துறந்தனர். தசரதர் உயிர் விடுங்காலத்தில் அவருடைய மக்கள் நால்வரும் பக்கலில் இல்லாதிருந்தனர். பித்ரு புத்ராள் உயிர்க்குயிராய் நேசித்தனர் என்பதற்கு தசரதருடைய மரணமே போதிய சான்றாகும்மே!

சிருஷ்டிக்குந்தன்மை தெய்வத்திற் கேற்பட்டவாறு பிதாவும்; மாதாவும் ஒருங்குகூடி மக்களுண்டாவதால் “ அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வ” மெனக் கூறினர் ஔவையார். முதன் முதல் கடவுளராய அன்னையாரையும் தந்தையாரையுமே மக்கள் வழிபட வேண்டுமென்ற வொழுக்கமுறையையே “ தந்தை தாய்ப்பேண் ” என்றனர் ஔவையார்.

நமது சிற்றறிவிற் கெட்டியமட்டில் உய்த்துணர்ந்து பார்ப்போமாயின், தசரததநயனும் ராமச்சந்திரன் சச்சிதானந்த பரப்ரம்ஹஸ்வரூபனாய்ப் பூமியில் மானிடவடிவங் கொண்டவதரித்தன ராயினும், சும்மாநுஷ விக்ரஹ சாக்ஷாத்கார பரம்பொருளாய்க் காரணங்கருதி வந்த பரமபுருஷனாயினும், மாநுஷவியற்கையில் தம்முடைய மாத்ரு, பித்ருப்பிரதரு, மித்ராதியர் விஷபத்திலும்; பத்நியினிடத்திலும்; அமைச்சரிடத்திலும், சேகவரிடத்திலும், மற்றுமுள்ள உலகினரிடத்திலும், பசு. பக்ஷிகளாய பிராணிகளிடத்திலும், நேசித்து வந்ததினால் கருணைக் கடலென யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படியாய் நடித்துக்காட்டி உலகினராய நாமனைவரும் அந்தப்படியே நம் வாழ்நாட்களை வீணாளாக்காமல் நன்மையையே கடைப்பிடியாய்ப் பிடித்தொழுகும் மாதிரியைக் கற்பித்திருக்கின்றனர். அப்படியே நாமெல்லாரும் ஒழுகி வருவோமாயின், ஆத்ம சாக்ஷாத்கார பேரின்ப வீட்டையடையச் சிறிதுந் தடையேற்படவே மாட்டாது. கபடநாடகனான பகவான் நம்மைப்போலவே, சிரித்து விளையாடி, அழுது சுகதுக்கங்களைச் சமமாய்ப் பாராட்டியும் நடந்துவந்த காலத்திலேயும் பித்ரு மாத்ரு குருபக்தியினின்றும் சிறிதுந் தவறாமலும்; பத்நியினிடம் அன்பு குறையாமலும், துணைவரிடம் பேதம் நினையாமலும், மித்ரனைத் தன்னைப்போல் கருதியும் சத்துருவை வேருடன்களைந்து முடித்தும், மக்களை அன்புடன் பேணியும், பெரியோர்களை வணங்கியும், சிறியோர்களை சீருடன் நடத்தியும் வந்த அவருடைய சிறப்புகளை நம்மால் வர்ணிக்கத் தரமன்று. ஆயினும், சிலவற்றை இயன்றவளவில், நம்மவர்கள் படுகுழியாம் கோரமான நரகில் வீழாமல் மேன்மையுற்று உஜ்ஜீவிக்குமாறு அடியிற் கூறுவாம்.

காரணங்கருதி யவதாரஞ்செய்த ராமசந்திர பிரபு, தாம் வந்த காரியமாம், தேவகாரியத்தை மட்டில் முடித்துக்கொண்டு செல்லக் கருதாது, உலகினர் க்ஷேமத்தைநாடி என்றுமழியா கீர்த்திவாய்ந்தவராய் நடக்கலானதே அவதார மகிமையையும் லோகோத்தாரணத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. கிருஷ்ணாவதாரமும் இதேமாதிரியான மகிமையுள்ளதெனினும், ராமாவதாரத்தைப்போல் ஸ்வஸ்வரூபத்தை வெளிக்குக் காட்டாமல் உள்ளடக்கிக்கொண்டே நடத்தியருளிய மாதிரியாயில்லாமல் பகவான் கிருஷ்ணாவதாத்தில் ஸ்வஸ்வரூபத்தை வெளியில் சிலசமயங்களில் காட்டி மோகிக்கப்பண்ணி,

ஆச்சரியப்படும்படி நடக்கலாயினர். அவதாரங்களில் ராமகிருஷ்ணாவ தாரங்களே பூர்ணாவதாரமாம். ராமகிருஷணர்கள், தம் தம் ஜாதி நீதி குலாச்சார மதாச்சார வழக்கவொழுக்கங்களினின்றும் சிறிதள வும் நழுவாத பரமபுருஷர்களாய், நித்திய * ப்ரம்ஹச்சர்யாச்ரிமிக ளாய் விளங்கிக்கொண்டு வந்தமையாற்றான் இன்னும் அவர்களுடைய கீர்த்தி ப்ரபாவங்கள் செவ்வனே ஈரேழுலகங்களிலேயும் பிரகாசித் துக்கொண்டிருக்கின்றன. மற்ற அவதாரங்களோவெனில், காரணங் கருதிய பிரயோஜனார்த்தமாய் மாத்திரம் விளங்குமேயல்லாமல் ராம கிருஷ்ணர்களைப்போலவன்று. ராம கிருஷணர்களுள் ராமருடைய குணவிசேஷங்களைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் ராமர் பொ ருளை திரணமென மதித்தனர். முற்றுங்களைந்து பார்க்கப்புகுவோ மேயானால், ராமச்சந்திரனும், அவரைப்போல் அவருடைய துணை வர்கள் மூவரும் பொருளாசையை முற்றும் போக்கினவர்களாய், பர தன் பரமபாகவத பக்தியையும், லக்ஷ்மணன் பகவத்கைங்கர்ய பக்தி யையும், சத்ருக்னன் பாகவதகைங்கரிய பக்தியையும் மேற்கொண்டு, தர்மார்த்த காமமோக்ஷமென்ற சதுர்வித புருஷார்த்தங்களையே பெரி தாய் நினைத்து, இடையிலுள்ள இரண்டு புருஷார்தங்களையும், தர்ம மார்க்கத்தில் அர்த்த (பொருள்) ஆர்ஜிதமு (சம்பாத்தியமு) ம் தர்ம மார்க்கத்திலேயே காமசுகத்தை தர்மகாமமாகவே அனுபவித்துக் கொண்டு வந்தனராகலின், முதன்மையான தர்மம் பெருகி இறுதி யில் பெறவேண்டியதான மோக்ஷ (பேரின்ப) வீட்டைப் பெற்றும், நமக்கும் அவ்வாறுயொழுகி அழிவில்லாத மோக்ஷ (பேரின்ப) சாம் ப்ராஜ்ப பதவியை யடையும்படியான நன்மார்க்கோபதேசஞ் செய் தருளியிருக்கின்றனர். கிருஷ்ணாவதாரத்திலும் கிருஷ்ண பரமாத் மாவும் பலராமரும் அவ்வாறாகவே யொழுகிவந்த சிலரேயாம். ராம சந்திரர் தம்முடைய மாற்றாந்தாயான கைகேயி தேவியாரின் விருப் பத்தின்படி, பிதாவை சத்தியவாதியாகச் செய்யும்பொருட்டாய் இப் பூவுலகத்தையும் ஒரு குடைக்குக் கீழ் அரசாளும்படியான சக்ர வர்த்திய அரும்பதவியையும், அந்தப் பதவியினாலுறும் ஐச்வரியங் களையும் எள்ளளவேனும் மனதில் எண்ணியும் பாராமல் கானகஞ் சென்றனரே! அக்காலத்திலாயினும் தம்மாற்றாந்தாய் கைகேயி யம் மையைக் கொஞ்சமேனும் கடிந்துரையாடினரோ? இல்லை. அவ்வம் மையினது வரபிரதானமான தமக்குற்ற கட்டளையை மனத்திருப்தி யுடன் சிரஸாய் வகித்துப்போந்தனர். (இன்னும்வரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

---

* சந்தான வழக்க ஒழுக்கங்கள் குலாச்சார மதாச்சார தர்மங் களினின்றும் சிறிதும் வழுவுதலின்றி நியாய மார்க்கத்திலொழுகுஞ் சீலர்களானதால் ராமகிருஷ்ணர்களை நித்ய பிரம்ஹச்சாரிகளென்றே வழங்கலாயிற்று.

நீலமோதிரம்.

(323-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்போது இந்தப் பாழுங்கிணற்றில் கிடக்கும் கற்களுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் ஒன்றுமேயில்லை. இந்த உலகத்தின்கண் மனிதரிடம் சென்றுல்தான் இல்லாத பேதமெல்லாம் உண்டாகின்றன. என்னை உலகத்திலில்லாத பொருளென்று சொன்னர்கள். என்னை தூக்கிச் சுமந்தார்கள். நானும் இந்த கெர்வமென்ற மாயையில் அகப்பட்டு அறிவிழந்து என்னைவிட உயர்ந்த பொருள் இந்த உலகத்தில் இல்லவேயில்லை என்று இறுமாந்திருந்தேன். இப்பொழுது என்கதி அதோகதியாய்விட்டது. கஷ்டம் வந்ததின்பேரில் கடவுளைக்குறித்து தவம் செய்துகொண்டிருந்தேன்.

நான் விழுந்து கிடக்கும் கிணற்றின் வழியாக ஓர் சாமியார் வெய்யில் பொறுக்கமாட்டாமல், தாகவிடாய் கொண்டு பரதவித்து வரும்சமயம் என்னுடைய அதிர்ஷடத்தால் நான் இருந்த கிணறு அவர் கண்களில்பட்டது. உடனே சாமியார் வெகு சந்தோஷத்துடன் தாகத்துக்கு தண்ணீர் அருந்தலாமென்று கிணற்றையெட்டிப் பார்த்தார். கிணற்றில் தண்ணீர்கிடையாது. அதுகண்டு சாமியார் மனவருத்தப்பட்டு அடுத்த நகரங்களிலசென்று யாசகம்வாங்கி இந்த கிணற்றைவெட்டினல் நல்ல உபகாரமாயிருக்குமென்று நினைத்து அடுத்த நகரங்களிற்சென்று சில ரூபாய்கள் சேகரித்துக் கொண்டும் தன்னோடு இரண்டு ஆள்களும் கூட்டிக்கொண்டுவந்து அந்தக் கிணற்றைவெட்டினர். வெட்டும்பொழுது என்னைக் கண்டெடுத்துத் தன்லில் அணிந்துகொண்டார்.

நானும் 'நான்செய்த தவத்துக்கல்லவா இந்த சாமியார் வந்து கிணற்றை வெட்டினரென்றும் இனி பரகதி பெறலாமென்றும்' அகமகிழ்ந்திருந்தேன். அதன் பிறகு சாமியார் கிணற்றை வெட்டி முடித்ததின் பேரில் முத்தமிழ் க்ஷேத்திரமாகிய மதுரைக்குச்சென்று கோவிலுக்குப்போய் சுவாமி தெரிசனஞ்செய்துக்கொண்டு விபூதி சந்தனம் வாங்கி பூசிக்கொள்ளும்போது என்னுடைய ஒளி அவர் கண்களில் பட்டது. அதுகண்டசாமியார் என்னை சோமசுந்திரகடவுளின் திருக்கரத்தில் சேர்ப்பித்து தன் இருப்பிடம் சென்றார். நானும் கடவுளின் திருக்கரத்தில் அடைந்ததைப்பற்றி வெகு சந்தோஷமாய் இருந்தேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

பழ. ச. கருப்பஞ் செட்டியார், கீழ்ச்சிவல்பட்டி.

மதிவதனம் ஓர் இனிய தமிழ் நாவல். விலை அணா 12.

இராஜா கோபிசந்த் இனிய நாடகம். விலை அணா 8

விலாசம்: வீ. ஆர். கேய்க்வார்,

2-15, பெருமாள் கோவில் தோட்டம் முதல் தெரு,

சௌகார்பேட்டை, சென்னை.

மதனசுந்தரி அல்லது மர்மக் கொலைகள்.

(ஒரு துப்பறியும் நவீன நாவல்).

அத்தியாயம் 1.

காதலன் பிரிவு.

உலகத்தில் சகல ஜீவராசிகளேயும் படைக்கவும் ஆதரிக்கவும் வல்லனுகிய ஆதிசேஷ சயனனுகிய க்ஷீராப்தியின் அதிபதியான எல்லாம் வல்ல அப்பரம்பொருளே நாம் நமது கதை தொடங்கும் முன்னரே ஆராதித்தல் வேண்டும்.

அஞ்ஞான இருளை ஒழிக்கவல்லனுகிய ஆதித்தன் தன் பொற் கிரணங்களை மடக்கிக்கொண்டு அஸ்தமிக்கும் சமயம் மேன்மையி லும், விஸ்தாரத்திலும், மாடமாளிகை, கூடகோபுரங்களிலும், விசா லமான வீதிகளிலும் சிறந்ததும் தேஜோமயமாகியதுமாகிய புகழும் படியான புல்லூர் ஜமீன்தாரது பங்களாவிற்கு பின்புறத்தேயுள்ள தோர் நந்தவனத்தில் ஒரு இளநங்கையும், ஒரு வாலிபனும் அதிக விசனத்துடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். சுந்தரி என்னும் அவ்விள நங்கை சுமார் 18 வயதுடையவளாயும், மேகம் போன்ற கருத்த கூந்தலேயுடையவளாயும், தாமரைமலரைப்போன்ற அவளது வதனம் வாடியும், வில்லேப்போல் வளேந்து நீண்ட புருவமும், வேலே ஒப்பத்தக்க விழிகளும், வெண்முத்தைப் போன்ற பற்களேயுடைய அவளது ஒவ்வொரு அங்கங்களும் துக்கமென்னும் சாகரத்திஞல் வாடியிருந்தது. தவிர மதனன் என்னும் அவ்வாலிபன் அவளழ கிற்கு ஒப்பத்தீர புஜபராக்கிரமம் பொருந்தியவனுயும், 25 அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கும் வயதையுடையவனுயும் உள்ள அவனும் விசன வதனத்துடனிருந்தான். என்னே! பலவித நறு மணத்தைத் தரும்படியான முல்லே, மல்லி, ரோஜா, சாமந்தி, கதிர் பச்சை முதலிய புஷ்பச்செடிகளும்; சந்தனம், மகிழ், சண்பகம், பன்னீர் முதலிய புஷ்பவிருக்ஷங்களும், மா, பலா, கமுகு, ஆரஞ்சு முதலிய கனிவர்க்கத்தைக் கொடுக்கும்படியான விருக்ஷங்களும், வசந்தகால மாகையால் தெள்ளிய தென்றல் தெளிவாக வீசிக்கொண் டிருக்கும் அவவரிய நந்தவனத்தில், சந்தோஷமாகவும், உல்லாசமாக வும் பேசி, சுகமாய் இருப்பதற்குப்பதில் அவர்க ளிருவரும் துக்கத் துடன் பேசும் சங்கதியைக் கொஞ்சம் கவனிப்போம். சுந்தரி தன தரும் காதலனே நோக்கி, "அன்பா! நான் என்ன செய்வேன்? உமது தமயன் எவ்விடத்தில் என்னேச் சந்தித்தபோதிலும், நீ மதனனுடன் பேசலாகாதெனக் கண்டிப்பான கட்டளேயிடுகின்ருர். அதைக் கேட்ட என்மனமோ அனலிலிட்ட மெழுகுபோல் உருகாநிற்கிறது. நான் என்ன செய்வேன்'' என்ருள்.

மதனன்:—அன்பே! உன்னே மாத்திரமன்று, என்னேக்கண்டா லும் நீ சுந்தரியுடன் பேசலாகாதென்கிருர். நாம் என் செய்வது?

விதியை வெல்ல எவரால் முடியும். நீயோ என்னைத் தவிர எவரையும் மணக்கேன் என்கிறாய், இன்றேல் இறந்துவிடுவேன் என்கிறாய். என்ன செய்வதென்று தோன்றவில்லை. நீயேசொல். சீக்கிரமாய்ச் சொல் என் தமயன் நாம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து விட்டால் வினையாகமுடியும்.

சுந்தரி:—நமது காதலுக்குத் தடைப்படுத்தும் அவரை என்ன செய்தால்தானாகாது, என ஆத்திரத்தோடு புகன்றாள்.

மதனன்:—கண்மணி, நான் சொல்வதைக் கேள், நாமிருவரும் அவருக்குத்தெரியாமல் எங்கேயாவது சென்றுவிட்டால், நலமென எனக்குத் தோற்றுகிறது. நீ என்ன சொல்லுகிறாய் ?

இக்கேள்விக்கு யாது விடையளிப்பதெனத் தெரியாமல் திகைப்புடன், விடை கூறாது நின்றாள். அச்சமயத்தில் ஒருவர் அதிக கோபாக்கிராந்தராய் அங்குதோன்றினர். அவரைப்பார்ததால், 30 வயதுடையவரென மதிக்கலாம். அவரது தேகம் கருத்தும், பருமனுகவு மிருந்தது. அவர் அங்கு தோன்றியவுடன் மதனனை நோக்கி, "அடே! பாதகா! உற்ற தமயனுக்கே துரோகம் நினைத்த காதகா! இனி அரை க்ஷணமும் இங்கு தாமதியாதே, இப்பக்கமே திரும்பாதே. என்ன எண்ணமடா கொண்டாய், என் கண்முன் நில்லாமல் சென்று விடு" என உறுமினர்.

மதனனே, சற்று அபரிக்கையாய் தன் அண்ணனாகிய பிரதாப முதலியாரை நோக்கி, "அண்ணா! ஆத்திரம் கொள்ளவேண்டாம். அப்பெண்ணே என்னையன்றி எவரையும் மணங்கொள்ளேனென்றும் இன்றேல் இறப்பதாகவும் சொல்லுகின்றாள், பெண்பாவம் பொல்லாது. ஆதலால் உம்முடைய காதலும் பயனற்றது. நானும் அவளைக் காக்கப் பழிக்குப் பழிவாங்குவது போல், உம்மிடமிருந்து அவளைப்பிரித்து, நானே மணங் கொள்ளுவேன். இது சத்தியம். இதோ உமது சொற்படி இனி இவ்விடம் வராமல் சென்று விடுகிறேன்" எனச் சொல்லி, அவ்விடத்தை விட்டகன்றான்.

என்னே! ஆச்சரியம், இச்சுந்தரியானவள் யார்? இவளால் சகோதரரிருவரும், சச்சரவு கொள்ளுவானேன் ?

(இன்னும் வரும்) ஆர். ஜீ. ராஜன்.

திருச்செந்தில்வளர் சிவன் போற்றிப் பதிகம்.

(449-ம் பக்கத் தொடர்ச்சி).

4. நாவாலு மனதாலுந் தியானத்தாலும்
நட்பாலும் தமிழாலும் நாடி நாடி
வா வா வென்றழைக்க மயில் மீதிலேறி
மனதிரங்கி யடியேன் முன் வா வா சுவாமி!

பாவாலே யுனைத் துதித்து உலகத்தோர்கள்
பவிஷு பெற்றார் நானுமுன்றன் பாதங்காண
தேவாதி தேவா ! வென்னையா ! வா வா
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி.

5. தந்தையு நீ அன்னையு நீ யென்னையாளும்
சற்குரு நீ யென்றழைக்கத் தமியேன் முன்னே
வந்ததனாலுன் குலத்தில் தாழ்ச்சியாமோ ?
வாராம லிருப்பதற்கு வழக்கே துண்டோ ?
எந்தனுக்குச் சேனையுண்டோ வுனைப் பிடித்து
எளியேன்முன் கொண்டுவரு வாருண்டோசொல்
செந்திநக ராதிபனே ! ஐயா ! வா ! வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி.

6. நாட்டமுற்றே உன் மனதிலன்பு வைத்து
நானழைத்தால் வருவதற்கு நாயேன் முன்னே
கோட்டையுண்டோ வாடியுண்டோ வழிதோணாதோ
கூப்பிட்டால் தமியேனோசை செவி கேளாதோ
வாட்டமுற்றே நான் மயங்க லாமோ நீதான்
மனதிரங்கி யடியேன்முன் மகிழ்ச்சி கூர்ந்து
தேட்டமுற்றேன் என் மீதில் அன்புவைக்க
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி.

7. அப்பா வா ! குருவே வா ! அண்ணா வா ! வா !
ஆறுபடை வீடுடைய ஐயா வா வா !
சுப்பய்யா வா பொன் முத்தையா வா வா !
சுந்தரியா வீன்றெடுத்த துரையே வா வா !
இப்புவி புகழுமென்றன் குகனே வா வா !
எளியேனைக் காத்தருளும் சுவாமி வா வா !
செப்பரிய மெய்ப் பொருளே ஐயா வா வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி.

8. கஞ்சமலர் அணிந்திருக்கும் புயமும் மார்பும்,
காதிலணி குண்டலமும் கையும் வேலும்,
தஞ்சமென்றோர்க் கருள் புரியும் அமிர்தவாயும்,
சண்முகனே யுன்னிருதாள் சதங்கை கொஞ்ச
அஞ்சலென்று வந்தடியேன் றன்னைக் காக்க
அழகான மயிலேறி யடியேன் முன்னே
செஞ்சலங்கை கல கலென ஐயா ! வா ! வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி !

9. ஆக்கை நரம் பெலும்பு சதையுதிரம் சிந்தி
ஐம் புலனு மொடுங்கு முனமடியேன் முன்னே

பார்க்கிலு மென் கண்குளிர முகங்களாறும்
பன்னிரண்டு கண்ணுமுன்றன் பவளவாயும்
சேக்கை மயில் சேவல் வள்ளித் தெய்வானை
ஜெயவீர பாகுடனே தேவர் சூழ
தீர்க்கமுடன் வந்தெனை நீ ரட்சி ஐயா
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி !

10. அத்தனருள் பரமகுரு சுவாமி வா வா !
அங்கையற்கண் புத்திரனே ஐயா வா வா !
முத்திதரும் குமரகுரு மூர்த்தி வா வா !
முத்தையா நால்வேத முதலே வா வா !
பத்தருளந்தனில் வளரும் வள்ளி பங்கன்
பச்சைமயில் வாகனனே பரனே வா வா !
சித்தர் முனிவர் பணியும் குகனே வா வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி !

11. அயிலிலங்கச் செஞ்சேவல் கொடியும் வாளும்
ஆழி சங்கு சூலம் மழு அழகாயேந்தி
துயிலிலங்கப் பிடியிடையாள் வயிறுமுந்தி
சுழியுஞ்சுழித்திடு மந்த ரோமத்தூரும்
ஒயிலிலங்கு மணிமார்பும் கடப்பந்தாரும்
உன்னிருதாள் சதங்கை கொஞ்ச உவந்து வந்து
செயல் புரிந்து எனைக் காக்க ஐயா வா வா !
சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி !

(தொடரும்).

லால்குடி. சே கந்தசாமி ஐயர்.

சங்குபாலகன்.

அத்தியாயம் 1.

முற்காலத்தில் நம் நாட்டில் சலங்காபுரி என்று ஒரு நகரிருந்தது. அதைத் தலைமையாக வைத்துக்கொண்டு அதைச் சுற்றிலுமிருந்த நூற்றுத்தொண்ணூற்றாறு ஊர்களையும் ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனது பெயர் இன்னதென்று விளங்கவில்லையாதலால் அதை இங்கு எழுதவில்லை. இவனுக்குப் பல மனைவியர்களிருந்தும் வெகுகாலமாக ஒரு மகவேனும் பிறக்கவில்லை. அதனால் அம்மன்னன், மிகவும் கவலையடைந்திருந்தான். இவனுடைய வாழ்நாட்கள் பெரும்பாலும் இத்துக்கத்தினாலேயே கடந்தன. எக்காரியத்தையும் முன் ஆராயாது செய்துவிடுவது இவனது வழக்கமாகையால் வெகுகாலம் மகவைப் பெறவேண்டிய முயற்சி சிறிதும் இல்லாதிருந்தனன். ஒவ்வொரு வேளையில், "ஐயோ ! பிள்ளையில்லாதவர். 'புத்' என்

னும் நரகத்திற்கன்றோ ஆளாகவேண்டும். நாம் இனி எக்காலம் மக வைப்பெற்று மகிழ்வெய்தப்போகிறோம்'' எனப்பலவாறு புலம்பிக் கொண்டிருப்பான்.

இவ்வாறு பல நாட்கள் கடந்தன. ஒரு நாள் அம்மன்னன் துக்கமேலிட்டால் மிகவும் வருந்திக் கடைசியாக "யாம் காட்டை யடைந்து கடவுளை நோக்கித் தவம்புரிந்து எவ்வாற்றானும் ஒரு மக வைப் பெறவேண்டும்" என்று ஒரு எண்ணங்கொண்டான், அவ்வி தமே தன் னமைச்சனையழைத்து, "அமைச்ச! யான் அடவியை யுற்று அருந்தவம் புரிந்து ஒரு குழந்தையைப் பெற எண்ணங் கொ ண்டிருப்பதால் யான் வரும் வரையில் என் அரசைப்பெற்று செங் கோலோச்சி வருவாய்'' எனக் கட்டளையிட்டு அரசைத்தந்து, தன் மனைவியரிடத்திற்சென்று தான் போகுங் காரியத்தைப்பற்றிக் கூறி விடைபெற்றுக் காடு நோக்கிச் செல்வானாயினன்.

வெகு தூரங்கடந்துக் கடைசியாய் ஒரு அடவியையுற்று அவ் வடவியினுள் சிறிதுதூரம் நடந்து சென்றான். அப்பொழுது தன் னெதிரே ஒரு வேடன் வருவதைக் கண்டான்.

அவ்வேடனும் இவனைக்கண்டு அருகே வந்து, "ஐயா! தாம் யார்? தங்களுடைய பதி எது? தங்களை நோக்கின் அரசரைப்போ லத் தோற்றுகிறதே. ஏன் இவ்வளவு சளைப்புடன் இக்காட்டை நோக்கி வந்திருக்கிறீர்கள். தாங்கள் ஏதோ ஒரு துக்கத்திலாழ்ந் திருப்பதுபோலிருக்கிறதே! என்ன காரணம்?'' என மிக்க அன் பொழுகிய வசனத்தால் பணிவுடன் வினவினான்.

அதைக்கேட்ட அரசன், "அப்பா! யான் சலங்காபுரி மன்னன். என்வரலாற்றை உனக்குச் சொல்வதில் யாது பயன்!'' என்றான்.

"மன்னா! அப்படி யுரைக்காதீர்கள், தங்களுக்குற்ற துக்கத்தை இன்னதென்று தெரிவிப்பீர்கள், 'சிறு துரும்பும் பல் குத்த உதவு' மென்பது ஒரு பழமொழியல்லவா? ஏதோ என்னால் கூடியவரை யில் உதவி புரிகின்றேன்" என்றான் வேடன்.

உடனே மன்னன், "இவனால் நமது காரியம் ஒரு வேளை நிறைவேறினாலும் நிறைவேறும். கடவுளே இவனை நம்மெதிரே கொண்டுவந்து விட்டார் போலும்'' என மனதுக்குள் எண்ணிக் கொண்டு பிறகு, "அப்பா! எனக்குற்ற விசனத்தைத் தெரிவிக்கி றேன் கேள். எனக்குப் பல மனைவியர்க ளிருந்தும் இதுவரை யான் ஒரு குழந்தையையாவது பெற்று அதன் மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்வடைந்திலேன். அதற்காகக் கடவுளை நோக்கித் தவமியற்றி யாவது ஒருவரம் பெற்றுச் செல்லலாமென இங்குற்றேன்" என்று கூறினன்.

அப்படியானால் தாங்கள் துக்கப்படவேண்டாம். எனக்கு ஒரு புதல்வியிருக்கிறாள். அவள் இப்பொழுது தக்க பருவமடைந்

திருக்கிருள். அவளைத்தங்களுடன் தம் தேசத்திற்கு அழைத்துச் சென்று விவாகமுடித்துக் கொள்ளுங்கள். அவளால் தங்களுக்கு ஒரு புதல்வன் உண்டாவதோடு, இன்னும் பற்பல நன்மைகளு முண்டாகும். நான் கூறிய இவ்வளவும் உண்மை. தங்களுக்கு விருப்பமிருப்பின் இதோ இப்பொழுதே கூட்டிச் செல்லுங்கள்" என்முன் வேடன்.

அவனுடைய அழுத்தமான மொழிகளை மன்னன் நம்பிக் கடவுளே நமக்கிவ்வுதவியைப் புரிந்தார் என அவரைத்தொழுது, வேடனுக்கும் நன்றி கூறிப் பெண்ணை அனுப்பச்சொன்னான், அவன் தன் குடிசைக்கு அம்மன்னனை அழைத்துச்சென்று தன்னருமைப் புதல்வியை யழைத்து அரசனுடன் செல்லும்படி சொன்னான். அவள் "தந்தை சொல்மிக்க மந்திர மில்லை" யென்றபடி தவறாது தகப்பன் மொழியைத்தட்டாமல் அம்மன்னனுடன் செல்லச் சம்மதித்தாள். மன்னனும் அவளைத் தன்னுடன் தன் தேசத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவளை வெகு விமரிசையாக மணமுடித்துக் கொண்டான். முதல் அத்தியாயம் முற்றிற்று. (தொடரும்)

அ. சே. அருணசலேஸ்வரர்.

பாக்கியரத்தினம்.

அத்தியாயம் 2.

சம்பங்கியின் திறமை.

(464-ம் பக்கத் தொடர்ச்சி.)

நேயர்களே! நமது கதையைத் தொடங்குமுன் நமது சம்பங்கியைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுவோம். இவன் ஓர் பெரிய வம்சத்தில் உதித்தவன். அதிபால்யத்திலேயே கெட்ட சகவாசத்தால் மிகவும் துன்மார்க்கனுகி பொருள்கள் யாவற்றையும் இழந்து கள்ளக் கூட்டத்திற்கு அதிபதியானான். இவன் அவ்விடத்தில்செய்த அடாதகாரியத்தை நாம் இவ்விடத்தில்கூற நம்மால் முடியாது.

இவனைப் பிடிக்க அநேக முயற்சிகள் துரைத்தனத்தார் செய்தனர் ஆனல் அவனைப்பிடிக்கச்செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. இவன் சில பொய் கம்பனிகளை வைத்தும், கள்ளநோட்டுகள் அச்சடித்தும் நாட்டுச் சாராயத்தைக் கள்ளத்தனமாய்க்காய்ச்சி சீமை சாடி ஆக்கியும் சில பெரிய பெரிய வீட்டு குடும்பரகஸியத்தைத் தெரிந்துகொண்டு அதை அவர்களுக்குக் காட்டி அவர்களிடம் இருந்து பணத்தை வாங்கியும் இன்னும் சில பெண்கள் மேல் பொய்க் காதல் கொண்டும் அவர்களால் கிடைக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு ஜீவித்தும் வந்தான். இன்னும் இவனுக்கு எல்லா முக்கிய இடங்களிலும் சிற்சில ஏஜண்டுகள் உண்டு. அவர்கள் இவனுக்கு தங்கள்

தங்கள் இடங்களில் இருந்து பணம் கிடைக்கும் இடத்தைக் கூறு. வார்கள். இவனும் அவர்கள் இருக்குமிடம் பணத்தைப் பறிக்கும் விதம் தெரிந்து கொள்ளுவான். இவன் சமயத்திற்குதக்க மாறுவேடம் அணிவதில் இவனைவிட (ஒருவனைத்தவிர) ஒருவருமில்லை. இவனைப்பிடிக்க பல துப்பறிவர்களுக்கு உத்திரவு வந்து இருந்தது. ஆனால் ஒருவராலும் முடியவில்லை. இது நிற்க,

ரத்தினம் தன் வீடுசென்று தனது டிரங்கையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டு தன் தகப்பனார் நடேசமுதலியாரிடம் தான் மதுரைக்குப்போய் தூத்துக்குடி மார்க்கமாக கொழும்புக்குப் போய் அங்கிருந்து இங்கிலாந்துக்குப் போவதாய்ச் சொல்லிப் பிறகு நான் எங்கு எங்கு இறங்குகிறேனோ அங்கே யிருந்து ஒரு தந்தியடிப்பதாய்க் கூறிவிட்டு மோட்டாரில் ஏறிச்சென்றான். இவன் அரைமணி நேரத்திற்குள் சத்திர சிங்காரகோட்டையை அடைந்து பிறகு கால் மணி நேரத்துக்குள் மேலூருக்கு பாதி வழி வந்தவுடன் 'டுமீல்' என்ற சத்தங்கேட்டது. அதைக் கேட்டவுடன், திரும்பிப் பார்த்தான். பார்த்தபோது என்னவென்று சொல்லுவது. அவ்வளவு துக்கமா யிருந்தது. நமது ரத்தினத்தைப் பத்துபேர்கள் வந்து கட்டுவதற்குத் தயாராயிருப்பதாகவும் அதில் ஒருவன் ஒரு சீசாவை பிடித்துக்கொண்டிருப்பதாகவும் கண்டான். பிறகு கொஞ்சம் நேரத்திற்கெல்லாம் தன் துப்பாக்கியை எடுப்பதற்கு முயன்றபோது, தன் நெற்றிக்கு நேரில் ஒரு சுழல் துப்பாக்கி வருவதைக்கண்டு ஐயோ என்று அலறிக்கொண்டு மோட்டாரிலேயே மூர்ச்சையானான்.

(தொடரும்) T. R சேஷகிரி ராவ்.

ஆனந்தசுந்தரி

அல்லது

அதிர்ஷ்டத்தின் ஆர்ப்பாட்டம்.

அத்தியாயம் 7.

விடிந்ததும் பேசும் நியாயம் இதுவேயோ?

(435-ம் பக்கத் தொடர்ச்சி.)

மந்திரி காரியதரிசி:—"சரி, நீர் நில்லும்" என்று கூறிவிட்டு நமது கதாநாயகனான கண்ணப்பனை நோக்கி "உமது பெயர் என்ன? எங்கிருப்பது? என்ன குலம்? வயது எவ்வளவு?" என்று கேட்டார்.

கண்ணப்பன்:—என் பெயர் கண்ணப்பபிள்ளை. நானிருப்பது மங்கலபுரியின் கண்ணுள்ள 'வசந்த விலாசம்' அரண்மனையின் கீழ்ப்

புற வீதி. சைவவேளாளர் குலத்தவன். எனக்கு சுமார் பதினெட்டு வயதாகிறது.

ம. கா. :—இந்தப் பிராதின் விபரம் என்ன ?

கண்ணப்பன் :—எனக்கு ஒன்றும் தெரியாது ? ஆனால் கட்டு கட்டு தாலியை விடிந்தால் பேசலாம் என்றார்கள். விடிந்த பின். பேசும் நியாயம் இதுவேபோ?

இச்சமயம் மந்திரி கண்ணப்பனை நன்றாய்க் கவனித்துத் தன்னுடையவும், அரசனுடையவும் ஆடையாபரணங்கள் இவன் மீது எவ்வாறு வந்தது என்று சந்தேகித்துத் தானே யோசித்து ஒன்றும் தோன்றாமல் தானே கண்ணப்பனை நோக்கிகேட்டலானார்.

மந்திரி :—அரசிளங் குமரனை போல் விளங்கும் கண்ணப்ப பிள்ளையே ! உமது விஷயத்தைக் கூறும்.

கண்ணப்பன் :—நேற்றையதினம் நான் கொள்ளு வாங்க வந்த வரையிலும் கூறியிருக்கின்றேனல்லவா ?

மந்திரி :—ஆம். அதன் பின் நடந்தது என்ன ?

கண்ணப்பன் :—நேற்று பகற்பொழுதெல்லாம் கொள்ளுக்காகத்திரிந்து அலைந்து கொள்ளுகிடையாமல் அலைந்துதிரிந்து அலுத்து அன்று மாலை பொழுதுபடுந் தருணத்தில் அரசர் பெருமான் சத்திரத்தில் படுத்துவிட்டேன். அதுதான் தெரியும். இரவு நல்ல இருட்டாயிருந்தது. ஆனால் மணி இவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த நேரத்தில் சந்திரன் உதயமாய் நடந்து வருவதுபோல ஒரு அழகிய பெண்மணி கையில் ஒரு தட்டுநிறைய பக்ஷணங்களும் பாலும், மற்றொரு கையில் ஆடையாபரண மூட்டையும் கொண்டு வந்து வைத்துவிட்டு என்னைத் தட்டி எழுப்பினாள், நான் எழுந்ததும் என் முன் பக்ஷணத்தையும் பாலையும்வைத்து உண்ணும்படி கூறவே நானும் அவைகளையுண்டு பாலையும் பருகினேன். எனக்கு தேகாதியந்தமும் சந்தனத்தைப் பூசி அநேக ஆபரணங்களையும் அணிவித்து பீதாம்பரத்தை யணியக்கொடுத்து என்னோடு சரச சல்லாப உல்லாசமாயிருந்துவிட்டு தான் போகும் சமயம் அரசகுமாரத்தியென அறிவித்துச் சென்றாள். சிறிது நேரந்துக்குப்பின் ஒரு பிராமணன் வந்து, "யார் இங்கே படுத்திருப்பது ?" என்று கேட்டார். நான் "இவ்வூர் வாசி" என்றேன் அதற்கு அவர் "இங்கே படுக்கக்கூடாது அடுத்த சத்திரத்துக்குப் போ" என்றார். நானும் எழுந்துபோய் அடுத்த சத்திரத்தில் படுத்த பத்து நிமிஷத்திற்குள் அந்த சத்திரத்திலும் ஒரு சந்திரன் கைகால் பெற்று நடந்து வருவதுபோல ஒரு கன்னிகைவந்து முன் வந்தவள் போலவே நடந்து கொண்டு போகும் சமயம் மந்திரிமகள் என்று கூறிச் சென்றாள். சிறிது நேரங்கழித்து முதல் சத்திரத்தில் படுக்கக்கூடாது என்

கூறிய பார்ப்பான் வந்து இவ்விடத்தினின்றும் துரத்தினான். நான் எழுந்து ஊருக்குள் நடந்தேன். ஊரில் ஓசையடங்கிப் போய்விட்டதனால் நாய்களின் குலைப்புச்சத்தமும், பெருச்சாளிகளின் பாரி உலாத்தலும் அதிகமாயிருக்கக்கண்டு பார்த்து வெளிச்சமுள்ள விடத்தில் படுத்து உறங்குவது நலமென்றெண்ணி நடந்துபோகும் சமயம் பெரிய வீதியில் ஒரு வீட்டின் முன்னால் அநேக தீபங்கள் பிரகாசித்தது. திண்ணைகளின்பேரில் பாய்கள் விரிக்கப்பட்டு தலையணைகள் போடப்பட்டிருக்கக்கண்டு இவ்விடத்தில் படுத்துக்கொண்டிருந்து விடிந்தபின் போகலாமென்றெண்ணிப்படுத்தேன். அதுதான் தெரியும். எவ்வளவு நேரம் தூங்கினேனோ தெரியாது. சிலர் வந்து என்னை தூக்கி யுட்கார வைத்து வாசனை நீரினைத்தெளித்து "மாப்பிள்ளை! எழுந்திரும், எழுந்திரும், முகூர்த்தம் கடந்து போகிறது. நடக்கிறது நடக்கட்டும் மற்றவை பின்னால் பேசலாம் என்றனர். நான் ஒன்றும் தெளிந்து கொள்ளக் கூடா நிலைமையி லிருக்கவே யென்னைத் தூக்கிக்கொண்டுபோய் நிற்கவைத்து, "கட்டு கட்டு தாலியை, விடிந்தால் பேசலாம்" என்றனன். நான் தாலி கட்டினேனோ இல்லையோ தெரியாது. ஒரு பெண்ணின் துடையின்மேல் என் துடை வைக்கப்பட்டு அவளும் என்னைத் தொட்டவண்ணமே உட்கார்ந்திருக்க பிராமணனால் ஏதோ நடத்தப்பட்டது. விடியும் சமயம் எல்லாரும் என்னையே நோக்கினர். சிறிது நேரத்துக்குள் கொத்தவால் அவர்கள் வந்து என்னை வண்டியிலேற்றி தன் வீட்டிற்கு அழைத்துப் போய் காலைப் போஜனம் முடிப்பித்து இவ்விடம் அழைத்து வந்தார். இதுவே எனக்குத் தெரியும்.

(தொடரும்) தமிழ்ப்பூஷணம்.

இரணரங்கசூரன்

அல்லது

வலைஞன் வையகம் ஆண்ட விநோதம்.

அத்தியாயம் 8.

புலிப்பால் கோண்டு வருதல்.

448-ம் பக்கத் தொடர்ச்சி.

மேற்கண்ட விதம் எவ்வளவுநேரம் இருந்தனரென்பது இனி சதிபதியாகப் போகின்றவர்களுக்குத் தெரிந்திலது. ஆனால் தாய்ப்புலியின் சப்தத்தைக்கேட் டிருவரும் திடுக்கிட்டுப் பிரிந்தனர். இரணரங்கசூரனைப் பார்க்க வியாக்கிரவதிக்கு வெட்கமாயிற்று. இச்சமயம் தாய்ப்புலி வியாக்கிரவதியை யணுகி, "குழந்தாய்! நாளைய

தினம் காலையில் முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நீயும் உனது கணவனும் விவாகத்திற்கு தயாராயிருக்கவேண்டும்" என்று சொல்லி கலியாண விஷயங்களைக் கவனிக்கச்சென்றது.

புலி சென்ற சில நிமிஷங்கள் கழிந்ததும் இரணரங்கசூரனிருக்கும் குகையின் முன்னர் எண்ணிக்கையற்ற புலிகள் கூடின. புலிகளின் ஆர்ப்பாட்டத்தையும் கூட்டத்தையும் கண்ட இரணரங்கசூரனுக்குப் பயம் மேலிட்டது. உடல் நடுங்கிற்று. எப்போதும் புலியைப் பாராதவன். துஷ்டமிருகமென்றும், மானிடரைக் கொல்லும் சுபாவமுடையதென்றும், மகா கொடியதென்றும் கேள்விப்பட்டிருந்தவனானதாலேயும், இயற்கையிலேயே செம்படவனானதாலேயும், இவனுக்குப் பயம் ஏற்பட்டது. ஆனால் வியாக்கிரவதியின் அருகிலிருப்பதினாலும், விநாயகரின் ஸ்தோத்திரத்தினாலும், தனக்கு மாமியாகிய புலி நம்மை யாதொன்றுஞ் செய்யாதென்னும் எண்ணத்தினாலும் சிறிது தைரியமாகவே யிருந்தான்.

இராப்பொழுது மிக்க ஆரவாரமாகவே கழிந்தது. சூரியன் கீழ்த்திசையில் தோன்றின மூன்று நாழிகைப் பொழுதுக்கெல்லாம் இரணரங்கசூரன் வியாக்கிரவதியைப் பாணிக்கிரஹணஞ் செய்துக் கொண்டான்.

புலிகளால் விவாகம் வெகு விமரிசையாகவே நடத்தப்பட்டது. விருந்துகள் நடத்தப்பட்டன. கலியாணம் தொடர்ச்சியாக ஐந்து நாள் நடந்தது. இரணரங்கசூரனும் வியாக்கிரவதியும் இன்பத்தை யெவ்விதமான சந்தோஷத்தோடு அனுபவித்திருப்பார்களென்பதை வாசகர்களே யறிய விடுக்குதும்.

ஆறும்நாள் காலை கதாநாயகன் வியாக்கிரவதியை நோக்கி "பெண்ணே! நான் அரசனிடத்தில் உத்தியோகம் செய்கிறேன். நான் புலிப்பால் வேண்டி வந்தவன். வந்தவிடத்தில் உன்னை மணக்கும் பாக்கியமும் பெற்றேன். இனி இவ்விடத்தி லிருப்பதென்றால் அது கூடாத காரியமாகும். நாம் இன்றே பிரயாணப்பட்டால்தான் நாளை காலையில் போய்ச் சேரமுடியும்" என்று கூறினான்.

இம்மொழிகள் வியாக்கிரவதிக்கும் உண்மையென் றேற்பட்டதோடு தனது தமக்கையையும் காணவேண்டுமென்னும் ஆவல்மிகுந்தவளாய் தனது தாய்ப்புலிக்கு அறிவித்தாள்.

தாய்ப்புலியும் வியாக்ரவதியின் மொழிகளை யாமோதித்து தன் இனத்தாரையெல்லாம் அழைத்துக்கொண்டுவந்து இரணரங்கசூரனையும், வியாக்கிரவதியையும் தனித்தனி புலிகளின்மீது ஆரோகணிக்கச் செய்து புறப்பட்டன. இரவு முழுதும் நடந்து விடியற்காலையில் அவ்வூரின் எல்லையையடைந்தும் புலிகளையெல்லாம் ஒன்று சேர்த்து கூச்சலிடும்படிக் கட்டளையிட்டான். புலிகளும் அவ்விதமே செய்தன ஊரிலுள்ளவர்களெல்லாம் பயந்து கதவையுந் திறக்காமல் நடுநடுங்கி

யிருந்தனர். பல்லக்கு சுமந்துவந்து இரணரங்கசூரன் அரண்மனை யின் முன்புறந் தங்கியிருந்த போயிகளும் பல்லக்கை யங்கேயே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

இரணரங்கசூரன் புலிகளையெல்லாம் அனுப்பிவிட்டு இரண்டு பெண்புலிகளையும், தானும் தனது சதியும் ஏறியிருந்த புலிகளையும் உடனழைத்துக்கொண்டு ஊருக்குள் சென்று தனது சதியை தன் அரண்மனையில் விட்டுவிட்டு நான்கு புலிகளையும் அழைத்துக்கொண்டு நேரே அரசன் அரண்மனையை நோக்கிச்சென்றான்.

இச்சமயம் அரசனும் அமைச்சனும் உப்பரிகையின்மீது நின்று இரணரங்கசூரன் வரவைக்கண்டு ஏதும் புகலவியலாதவராய் திகைத்து நின்றனர். இரணரங்கசூரன் வேலைக்காரர்களை யழைத்து பாத்திரங்கள் கொண்டுவரச்செய்து அரசனும் மந்திரியுங் காணப் பாலைக் கறந்து கொடுத்தனுப்பிப் புலிகளைக் காட்டுக்குப் போகச்சொல்லி அரசனிடமும் அமைச்சனிடமும் விடைபெற்று வீடடைந்து சிரம பரிகாரஞ் செய்துகொண்டான்.

* * * *

அரசனும் அமைச்சனும் அளவிலடங்காத அதிசயமேலிட்டவர்களாய் "நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்ததே" என்று ஏங்கி யிருந்தனர். (தொடரும்) வி. ஆர். கேப்க்வார்.

ரஞ்சித ரத்ன மாலா.

(பலர் 2)

1. மாற்றம் :—

உன் கண்ணுக்குத் தோன்றுவ தெல்லாம் நிஜமென்று நினைக்காதே. செப்படிவித்தையில் பல பொருள்களை உண்டாக்குவதாகக் காட்டுகிறான். அவைக ளெல்லாம் பொய். நாடகத்தில் பெண் மாதிரி வேஷம் போட்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் பெண்ணல்ல. உருவத்தின் மாற்றம். சில நிபவஞ்சகர்கள் மிகுந்த சிநேகிதர்போல் நடித்து நம்முடன் பழகுகிறார்கள். ஆனால் நெஞ்சிலோ கெடுக்கும் நினைவு. இவர்கள் மனத்தில் வேற்றுமை, வெளியில் ஒற்றுமை. உலகத்தில், எல்லாப் பொருள்களையும் நாம் பார்க்கிறோம். நமது பந்து, நமது வீடு, என்ற சொல்லுகிறோம். ஆனல் எல்லாம் மித்தை! பிரம்மம் சத்யம் ஜகன் மித்யா' இது மாயையாலுண்டாகும் மாற்றம்.

2. மாறுதல்:—

'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினனே' சமயத்திற்குத் தகுந்தபடி, காலத்திற்கேற்றவாறு, தேசப் பெரியோர்களெல்லாம் ஆமோதித்து, ஒரு விதி ஏற்படுத்தலாம்.

பழையதை மாற்றலாம் அல்லது தள்ளி விடலாம். பாரதத்தில் பாண்டு, திருதராட்டிரன், விதுரன் இவர்கள் பிறப்பைபற்றிச்சொல்வதைப் பார்த்தால், நமக்கு ஆச்சரியம்தரும். ஆயினும், அது அந்தக்காலத்து வழக்கமாயிருந்தது. இப்பொழுது அதன்படி நடக்கலாமோ? அதேபாதிரி, எந்தத்திட்டத்திலும் மாறுதல் இல்லாமலிருக்காது. ஏன்! காலம் மாறாமல் இருக்கிறதா? பழைய மனிதர்கள் மாதிரி இப்பொழுதிருக்கிறார்களா?

3. பின்னும் கவனித்தல்:—

அதோ உன்னைப் பின்புறமாக வீழ்த்த எது சமயம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறான் ஒரு விரோதி. நீயோ வெகு ஸ்வாரஸ்யமாக் ஒன்றையும் கவனியாமல் உன் வேலையை நடத்துகிறாய். உன் பின்பக்கமும் பார்த்துவேலை செய். முன்னால் போனவனுக்குப் பின்னால் பார்க்க வேண்டியதில்லையென்று நினைக்காதே.

4. எண்ணமும் காட்சியும்:—

ஒருவன் மற்றொருவன் மேல் ஒரு சந்தேகம் கொண்டு விட்டால் அவன் செய்யு மொவ்வொரு செய்கையும், தனதெண்ணத்திற் கநுகூலமாகவே காண்பான். இது உலக இயல்பு. ஒருவன் மற்றொருவனைத் திருடனெனச் சந்தேகங்கொண்டு விட்டால், அவன் செய்யு மொவ்வொரு செய்கையும், திருட்டு எண்ணத்துடன் செய்வதாக புலப்படுகிறது. ஒரு பெண் அவள் மேல் மிகுந்த காதல், அவளுக்கும் தன் மேல் காதல் உண்டு என்ற சந்தேகம். இந்நிலைமையில் அம்மானினி எதற்காகவேனும் திரும்பினால் தன்னையேநோக்குகிறாள் என்றதொரு மகிழ்ச்சி. சிறிதே கையை யசைத்தால், இது ஏதோ ஒரு செய்கையன்று, எனக்கெனச் செய்யும் சைகை என்ற தீர்மானம். வேறு சிரிக்கும் காரணத்தால் சிறிது சிரித்தால் தனக்காகவே தன்னை நோக்கியே சிரித்த அருமைச் சிரிப்பென்றதொரு ஆநந்தம். இவ்வளவிற்கும் அடிப்படையானது இவன் எண்ணமே. ஞானிகளின் செய்கையும் மேல்படியில் இதற்கொத்ததே எண்ணத்தில் எந்தப் பரம்பொருள் பிரகாசிக்கின்றதோ அதாகவே எங்கும்காண்பார்கள்.

5. உண்மையான நம்பிக்கையே ஊக்கத்திற்கும் தியாகத்திற்கும் அடிப்படை.

6. பக்கமாயிருக்கிறவர்களே விரோதியாகிறார்கள். எப்பொழுதும் அயல்வீடு எதிர்வீட்டுக்காருடன் சண்டைதான்.

கி. வா. ஜெகந்நாதன், மோகனூர்.

வசந்தஸமுத்திரம் அல்லது இரு ஜெகன்மோகினிகள்
விலை அணா 12.
விலாசம்:—ரஞ்சித போதினி ஆபீஸ்,
12, அருணாசல முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

அருளுடைமை.

ஆருயிர் யாதொன்றிடர் உறும் ஆங்கதற்
கோருயிர் போல உருகி உயக்கொள
நேரின் அது முடியாதெனின் நெஞ்சகத்து
ஈரம் உடைமை அருளின் இயல்பே.

அருளாவது, இவை தொடர் புடையவை என்றும், இவை தொடர்பில்லாதவை என்றும் நோக்காது இயல்பாகவே யாதொரு வித காரணமும் கருதாமல் எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய இரக்கம். அருளெனினும், கருணையெனினும், இரக்கமெனினும் ஒரேவித பொருளைத் தரக்கூடியது. உலக இன்பத்திற்குக் காரணம் பொருளேயாதல் போலத் தருமத்துக்குக் காரணம் அருளே யாகும். அருளென்னும் குணம் யாவரிடத்திருக்குமோ அவரிடத்தே பழிபாவங்கள் சிறிதும் அணுகாது நீங்கிவிடும். இல்லறத்திற்கு அன்பு சிறந்ததுபோல, துறவறத்திற்கு அருள் சிறந்தது.

"அருட்செல்வத் துட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள". (திருக்குறள்)

பொருளால் வரும் செல்வங்கள் இழிந்தவரிடத்தும் இருக்கின்றன. ஆதலால் செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந் தொழுகும் செல்வமானது அருட்செல்வமாம்.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை யிருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்"

அந்தகாரம் தங்கிய துன்பவுலகத்திலே போய்புகுதல் அருளைச் சேர்ந்த நெஞ்சை யுடையவர்க்கு இல்லை.

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு"

பொருளில்லார்க்கு இவ்வுலகத்தின் இன்பம் இல்லாமை போல அருளில்லாதவர்க்கு அவ்வுலகத்தின் இன்பம் இல்லை.

வாய்மையாகிய தகழியிலே பொறுமையாகிய திரியை இட்டு, தவமாகிய நெய்யை நிறையப்பெய்து, அருளாகிய விளக்கேற்றினால், அஞ்ஞானமாகிய பேரிருள் நீங்க, பதியாகிய மெய்ப்பொருள் வெளிப்படும்.

உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள்; அவ்வுயிர்களுக்கு நிலைகளாகிய உடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆதலால் கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்புபற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களே யாவர்கள்.

ஆகையால் நாம் நம்மிடத்திலுள்ள அஞ்ஞானமாகிய இருள் என்னும் தீய ஒழுக்கத்தை நீக்கி தர்மத்திற்குக் காரணமாகிய அருளைக்கொண்டு பிற உயிரை தன் உயிரைப் போல பாவித்து அதன்படி ஒழுகமுயல்வோமாக சுபம். சுபம். சுபம்.

தமிழபிமானி, K. சாமினாதன்.

ரஞ்சித போதினி இரண்டாமாண்டின் வாழ்த்து.

கும்மி.

கும்மிபடி பெண்காள் கும்மிபடி இரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாளும் கணபதி பாதத்தை
நாடிகும்மி யடியுங்கடி 1

ஆனைமுகனை போற்றுங்கடி ஞான
ஆறுமுகனை வாழ்த்துங்கடி
மானைத் திருக்கர மேந்திய வீசனை
மறவாமலே கும்மி யடியுங்கடி 2

காதிலே கம்மலொளி வீச இரு
கையில் வளையல் கலகலென
கோதி முடித்த கூந்தல் கலைய
கொண்டானடித்துப் பாடுங்கடி 3

நெற்றியிலே சாந்துபொட் டிலங்க இரு
நீண்டவிழியிலே மைதுலங்க
சுற்றியே மாதர்கள் கையிரண்டும்
தூக்கி கும்மி யடியுங்கடி 4

முத்துமாலைக ளசைந்தாட நல்ல
மோகனமாலை யொளிவீச
நத்துமூக்குத்தி யசைந்தாட
நாரியரே கும்மி யடியுங்கடி 5

சென்னைபுரியில் பிறந்துவரும் நல்ல
செந்தமிழ் ரஞ்சித போதினிக்கு
அன்னங்களே ரண்டாமாண்டு பிறந்தது
ஆரித்து வாழ்கவே கும்மியடி 6

மந்தமதியை துலக்கிடுமாம் ஞான
மார்க்கத்திலே கொண்டு சேர்த்திடுமாம்
சுந்திர ரஞ்சித போதினி வாழ்க
தூக்கி யிருகரங் கொட்டுங்கடி 7

சந்தா துளையிற் குறைந்ததுவாம் நல்ல
சந்ததியெல்லாம் நிறைந்ததுவாம்
பந்தாடு மாதரே சந்தாவில்சேர
பாரோ ரறிய கும்மியடி 8
வெம்பந்தம் தீர்த்த மூவரிலே யுமை
வேண்டிய ஞானப்பா லுண்டருளும்
சம்பந்த நாமம் பெற்றவன் வாழ்ந்திட
சார்ந்துகும்மி யடியுங்கடி 9
வாதவூரான் றிரு நாமங்கொண்ட புகழ்
மாணிக்க விலாச பிரசினிலே
மாதந்தோறும்வரும் ரஞ்சிதபோதினி
வாழவேகும்மி யடியுங்கடி 10

வீ. முருகேச முதலியார்,
பிராஞ்சு போஸ்டு மாஸ்டர், நாயுடுமங்கலம்.

வாழ்த்துப்பா.

வாழி வாழி நீடூழி ரஞ்சிதன் வாழி.

வெண்பா.

எங்கும் புகழோங்கும் ரஞ்சிதன்
என்றென்றும் ஒளியுடன் விளங்க
அன்பர் அன்பை ஆற்றும் அன்பன்
அடிகளை ஆராதிப் பாம்.

வ. கிருஷ்ணசாமி.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

I

அன்புள்ள ரஞ்சிதனே !

நீ உதித்து ஒருவருடமாகிறது. இப்போது நீ ஒரு வருடபிராயமுள்ள மதலையைப்போல் இங்கும் அங்கும் எங்கும் உலாவி ஜனங்களுக்கு சந்தோஷத்தையும் முயற்சியையும் விளைவித்துக்கொண்டு வருகின்றனை உன்னைப் பெற்றெடுத்தவர்களும் உன்னைக் கண்டு கொள்பவர்களும் நீடூழி வாழ்வார்களாக. நான் உன்னை என் அருந்தமிழ் நண்பனென்று சகோதர வாஞ்சைபோடு உன்னிடம் விசுவாசிப்பதால் நீ மாதந்தோறும் என்னைக்கண்டு பேசுகிறாய். உன்னைக் காணாதவர்கள் மதலைச்சொல்லைக் கேளாதவர்களே யாவர். ஆதலால் நீ என்னிடம் தவறாது மாதந்தோறும் வந்து என்னைக் காணவேண்டுமென்று உன்னையும் உன் பெற்றோர்களையும் கேட்டுக்கொள்ளுகி

றேன். சூரியனுவது தினந்தோறு முதித்து மறுபடியும் அந்திப் பொழுதில மறைகிறுன். ஆனுல் நீய்யா அப்படியின்றி எப்பொழுதும் என்னிடம் பிரகாசித்துக்கொண்டு வருகிறுய். ஆதலால் நீ இனறும் என்றும் சுக்ரன் (Venus) என்னும் நக்ஷத்திரத்தைப்போல் பிரகாசிப்பாய் என்று நினைத்து உனக்கு வந்தனமளிக்கிறேன்.

இங்ஙனம்: நின் தோழனுகிய
அ. ராமசந்திர நாயுடு, சின்னவரிக்கம், ஆம்பூர்.

II

"ரஞ்சித போதினி" பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா, தாங்கள் அனுப்பிய "ரஞ்சித போதினி" திங்கள்தோறும் வந்து எனக்கு மிக்க ஆநந்தம் ஊட்டிவந்ததோடு பற்பல நற்போதனைகளால் மிக்க புத்திகளையும் புகட்டிவந்தது. தமிழ்நாட்டில் இவ்வளவு குறைவான சந்தாவோடு இவ்வளவு புராண இதிகாச சம்பந்தமான பற்பல கதைகளையும் கூறிவரும் பத்திரிகை இருக்காதென நம்புகின்றேம். இவ்வித அருமைவாய்ந்த பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதைவிட ஆநந்தம் வேறுண்டோ? நம்மவர்கள் ஒரு நாளையில் வீணில் அழித்துவிடக்கூடிய பெருந் தொகைகளைக் காட்டிலும் இதன் சந்தா தொகை மிகவும் சிறிதாயிருக்கிறது. இதைப்பற்றி அதிகம் புகழ வேண்டியதில்லை. நல்ல பொருளை ஒருதரம் புகழ்ந்து கூறினுலும் போதும்.

நமது ரஞ்சிதனுக்கு முதலாம் ஆண்டுமுடிந்து இரண்டாம் ஆண்டும் தொடங்கிவிட்டது. இனி இன்னும் தேசமுன்னேற்றத்திற்குரிய பற்பல நல்ல சங்கதிகளையும் ரஞ்சிதன் தன்னுட் கொண்டு வருவானென்று நம்புகிறேம்.

இத்தோடு ரஞ்சிதனின் இரண்டாம் ஆண்டின் சந்தா தொகையையும் மணிபார்டர் மூலமாய் அனுப்பியிருக்கிறேன். பெற்றுக்கொண்டு ரஞ்சிதனை மறுபடியும் எனக்கு ஆநந்தம் ஊட்டுமாறு அனுப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

சந்தா நெ. 202, சி. சந்தனம் முத்திரியர்.

III

ரஞ்சிதா! நீ கடந்த துந்துபிஞு மாசிமீ முதல் தொடங்கி நாளது ருத்ரோத்காரிஞு தைமீ வரையில் பலவிடங்களிலுமுள்ள சந்தா நேயர்களிடத்தும் மற்றுமுள்ள அன்பர்களிடத்திலும் சென்று நேசர்கள் சந்தித்துப் பேசுவதுபோல் ஒவ்வொருவரிடமும் உனனுடைய பாசமென்கிற சொற்களால் அநேக ஞான புராண இதிகாசம், நாவல், உலக வேடிக்கை, தேசநன்மை, பலவகைக் குறிப்பு, தேச முன்னேற்ற வழி முதலியவைகளை ஓய்வில்லாமல் சொல்லி வந்தாய். உனக்கு முதல்வருடம் கடந்து இரண்டாவது புதியவருடம் பிறந்து

விட்டது. நீ இனிமேல் முன்வருடத்தைப் பார்க்கிலும் இவ்வருடத்தில் நல்லூக்கத்துடன சென்று நம் பாரதமக்கள் நல்வழிகொண்டு முன்னேற்றமடைய ஒருதோழனும் உபதேசம்செய்ய ஈஸ்வரன் அருள் செய்வாராக. நீயோ மிக்க குறைந்ததான 14-அணு சந்தாவையுடையவன். உன்னை முன்வருடத்தில் தெரியாமலிருந்தாலும் இவ்வருடத்தில் கல்விமான்களாகிய சம்காதர சம்காதரிகள் சந்தாதாரராய்ச் சேர்ந்து ஆதரிப்பார்களென்று நினைக்கிறேன். அப்படி பலவிடங்களிலுமுள்ள சீமான் சீமாட்டிகளை உனக்கு சந்தாதாரராய்ச் சேரும்படியாய் என் மனப்பூர்வமான வந்தனத்துடன் மன்றாடுகிறேன். உனது சந்தாநேயர்களையும் உனக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உன்னைத் துணையாகக்கொண்டு, 'காதலால் துக்கமுண்டு அல்லது ஈஸ்வரியால் நன்மையடைந்த சாந்தவதி' என்னும் கதையைத் தொடங்க உத்தேசிக்கிறேன். அதற்கும் இடந்தருவாயாக. உன்னுடைய பேரோ ரஞ்சிதன். அப்பெயர்க்கு ஏற்ப பாடுபடுகிறாயென்பது நன்கு விளங்குகின்றது. உன்னைப் பலரிடத்திலும் நேசம் செய்துவைக்கும பத்திராதிபரும் நின் துணைகொண்டு வியாசம் வரைகிறார். நீ இன்னும் மென்மேலும் ஊக்கங்கொண் டுழைக்கவும் பெருமை யோங்கவும் செய்வாயாக. உன்னைப்பற்றி எவ்விதத்திலும் குறைகூற இடமில்லை. ஆனால் ஒன்றுமட்டிலும் குறையிருக்கின்றது. அதாவது நீ மாதந்தோறும் பஞ்சாங்கத்துடன் வெளிவருவாயானால் வெகு நன்மையா யிருக்கும். அதைப்பற்றி பத்திராதிபரும் முயற்சி செயவாரென்று அநேக நண்பர்கள் எதிர்பார்க்கிறார்கள். நீயும் சந்தாநேயர்களும் உன்னைக் கண்ணுறும் கல்விமான்களும் வியாசம் எழுதும் நண்பர்களும் பத்திராதிபரும் நீடூழி வாழ எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். ஓம் தத் ஸத்.

நா. சுப. சாமிநாத உபாத்தியாயர், மாந்தை.

ஓர் விஞ்ஞாபனம்.

ரஞ்சிதன் சந்தாநேயர்களான அன்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் ரஞ்சிதனின் 50 மெம்பர் சந்தாதாரராகிய நா. சுப. சாமிநாத உபாத்தியாயராகிய நான் என் மனப்பூர்வமான வந்தனத்துடன் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் நமது ரஞ்சிதன் பத்திரிகை சிறியதாயிருந்தாலும் விஷயங்களெல்லாம் பெரியதாகவே கொண்டு உலவுகின்றான். ரஞ்சிதன் ஆரம்பத்தில் வந்தபோது இதுவா நீடித்து நடக்கப்போகின்றதென்று கொஞ்சம் மிதமாய் நினைத்தோம். நாம் இப்படி நினைக்க நாளடைவில் ரஞ்சிதன் எல்லா வகைகளிலும் வல்லமையோடு நடமாடுகிறான். ஒரு கை தட்டினால் சத்தம் பலப்படாது. பலபேர்கள் சேர்ந்து தட்டினால் சத்தம் பெரியதாய்க் கேட்கும் தன்மைபோல் நமது ரஞ்சிதன் இப்போ உள்ளதினின்றும் ஊக்கமாய் வந்

துலாவவேணுமானல் சந்தாதாரர்களாகிய நம்மவர்களுடைய உதவி யில்லாவிட்டால் தூங்குபவன்போ லிருப்பான். பத்திரிகாசிரியரும் மிகுந்த ஊக்கத்துடன் இதற்குப் பிரயாசைப்படுகின்றாரென்பது நாம் கூறுமலே யாவருக்கும் நன்கு விளங்குகின்றது. எத்தனையோ பத்தி ரிகைகள் உலகத்தில் உலவிவருகின்றதெனினும், அவைகளைப்போல வே நமது ரஞ்சிதனையும் விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் நாம் தக்க பிரயாசை யெடுத்துக் கொள்ளவேண்டும். ஆகச்சே ஒவ் வொரு பிரபுக்களும் தங்களாலியன்ற சொற்பமுயற்சியெடுத்து சந்தா தாரர்களை சேர்த்தனுப்பி ரஞ்சிதனை சந்தோஷத்துடன் கல்வியை விருததிசெய்யச் செய்யுமாறு தங்களை தாழ்மையோடு கேட்டுக்கொள் கிறேன். நா. சுப. சாமிநாத உபாத்தியாயர்,

பத்தகவி ஜோதிடம், மாந்தளை.

பரோபகாரம்.

ஆவுக்காயினும் அந்தணர்க்காயினும்
யாவர்க்காயினும் எளியவர்க்காயினும்
சாவப்பெற்றவரே தலைவானுரை
தேவர்க்குந் தொழுந் தேவர்களாகுவர்

அரிய நன்பர்களே! நாம் யாவர்களும் பாரதமாதாவின் புதல் வர்கள் நமது தாயாகிய பாரதமாதா ஸாதாரண ஸ்திரீயன்று, இவள் இணையற்ற சுத்த வீரர்களாயும் பரோபகாரிகளாயுமுள்ள மாந்தர் ஸகரன் ருக்மாங்கதன் ஜனகன் கார்த்தவீரியார்ச்சுனன் பரசுராமன் இராவணன் நளன் பீமசேனன் அர்ச்சுனன் காந்தி கோகலே முதலி யோரைப்பெற்றவள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பது ஒரு பழமொழி அது போல பாரதமாதாவிற்குப் பிறந்த நாம் வீரியம் தைரியம் பரோபகாரம் முதலியவற்றை மேற்கொள்ளா திருப்பதற் குக்காரணம் அறியாமையேயாம்.

நாம் நமக்கு ஏதாவதொரு ஆபத்து வந்துவிட்டால் அப்பொ ழுது பிறர் நமக்கு உபகாரம் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம். ஆனல் அவ்வாறே பிறரும் தமக்கு விபத்துற்றபொழுது நமது உதவி யை விரும்புவார்களென்பதை மறந்து விடுகிறோம். இது எவ்வளவு பேதமை, பிறர்க்கு உதவி செய்வது நமது கடமைகளில் ஒன்றாகும். ஆதலின் பிறத்துபகாரத்தை எதிர்பாராது பிறர்க்கு உதவி செய்கின் றவரே பரோபகாரிகளாவர். பிறர் நமக்கு செயயப்போகு முதவி யைக்கருதிச்செய்யு முபகாரம் பரோபகாரமாக மாட்டாது. அது கடனையாகும். பகைவர் அயலார் நட்பினர் என்னும் மூவரிடத் தும் பிறத்துபகாரத்தை எதிர்பார்க்காமல் செய்யு முதவியே பரோப காரமாகும். இராகவன் போர்க்களத்தில் இராவணனை மணிமுடி சிதரச்செய்து நீ இன்றுபோய் நாளைக்கு வருக என்று சொல்லியனுப்

பியது பகைவர்க்குச் செய்த பரோபகாரமாகும். பாண்டவர்கள் ஏகசக்ரபுரத்தில் வசித்தபொழுது குந்திதேவி பீமனை ஒரு பிராமணப் பிள்ளையின் பொருட்டு பகாசுரனுக்கு இரையாகக் கொடுப்பதற்கு உடன்பட்டனுப்பியது அயலார்க்கு செய்த பரோபகாரமாகும். கிருஷ்ணபகவான் குசேலர்க்குப் பெருஞ் செல்வமுண்டாகுமாறு கருணைபுரிந்தது நட்பினர்க்குச் செய்த பரோபகாரமாகும். பரோபகாரம் செய்கின்றவரே கடவுள் கருணைக்குப் பாத்திரராவார்.

கடவுள் நமக்கு கைகால் முதலிய அவயங்களையும் இந்திரியங்களையும் சரீரத்தையும் அறிவையும் கொடுத்திருப்பதை உற்றுநோக்குவார்க்குக் கடவுள் பரோபகாரியென்பது இனிது விளங்கும். சூரிய சந்திரர்கள் உதயமாகி அஸ்தமன மடைவதினாலும், காற்று வீசுவதினாலும், மேகம் மழை பொழிவதினாலும், பூமி நம்மை தாங்குவதினாலும், கடல் பொங்கி வழியாமையாலும் நாம உயிர் தரித்து வாழ்கின்றோம். அவைகள் நம்மிடமிருந்து பிறத்துபகாரத்தை எதிர்பார்க்கின்றனவா? இல்லை. அவைகள் பரோபகாரம் செய்யாவிடில் நாம் உயிர் தரித்திருப்பது முடியாதல்லவா? பரோபகாரத்தின்பொருட்டே ஆமை வடிவங்கொண்ட திருமாலும் ஆதிசேஷனும் இப்பூமியைத் தத்தம் முதுகிலும் தலையாலும் தாங்கிவருகின்றனர். ஆதலின் நாம் விருந்தினர், சுற்றத்தார், ஆதரவற்றவர், தரித்திரர், பிரம்மசாரி, சந்நியாசி முதலியோர்க்கு இயன்றளவு தினந்தோறும் பரோபகாரம் செய்து வருதல் வேண்டும்.

அசேதனமாகிய ஒரு மரத்தை கவனித்துப்பார்த்தால் பரோபகாரம் செய்வதவசியமென்பது இனிது விளங்கும். மரமானது தான் வெய்யலில் நின்று கொண்டு தன்னையடுத்துவரும் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் நிழலைக்கொடுத்து நல்ல காற்றை வீசி தன் மடியில் ஆனந்தமாகத் தூங்கச் செய்கின்றது. தன் தலையில் எவ்வளவு பறவைகள் வந்து உட்கார்ந்தாலும் இறைக்கைகளால் எவ்வளவு அடி அடித்தாலும் அவற்றைப்பொறுமையாய் சகித்துக்கொண்டு அதுகளுக்கு இடங்கொடுத்து தாங்குகின்றது. இடுப்பில் எவ்வளவோ பாம்புகள் சுற்றி வாழ்கின்றன. பொந்தில் எவ்வளவோ பூச்சி புழுக்களுக்கும் இடமளித்து எக்காலமும் பாதுகாக்கின்றது. கொம்புகளால் சில விஷமக் குரங்குகளைத் தாங்கிக்கொள்ளுகிறது. அவைகள் தன்னை எவ்வளவு சிரழித்தாலும் குட்டிகருணம் பாய்ந்தாலும் அவற்றைச் சாந்தமாகப் பொறுத்துக்கொள்ளுகிறது. தனது செல்வமாகிய பூவையழித்து அருமையான இனிய பொருளாகிய தேனை தீவத்திகொள்ளைக்காரரைப்போல சத்தம் போட்டுக்கொண்டு வந்து கொள்ளையடித்துச்செல்லும் வண்டினங்களையும் நல்வரவு கூறி, என் அருமை தும்பிகாள் காளையும் வாருங்கள் வேண்டியன எடுத்துச் செல்லலாம். அநுதினம் வந்தாலும் ஆனந்தமாய் எடுத்தேகுங்கள் தடை

யில்லை என்கிறது. தன்னை வெட்டுவதற்காக ஒருவன் அரிவாளேந்தி வந்தாலும் அவன் நிமித்தம் தன் நிழலை சுருக்கிக்கொண்டு அவனை வருத்துவதில்லை. அவனுக்கும் குளிர்ந்த நிழலையளிக்கின்றது. ஆஹா அசேதனமான இவ்விருக்ஷத்திற்கு எவ்வளவு பெருமை? என்ன பரோபகாரசிந்தை? என்ன சாந்தம்? அதனால் இதற்கு எவ்வளவு புகழ். இம்மரத்தைப்பார்த்தும் பரோபகாரத்தைச் செய்யாதவர் பேதைகளாவர். குளம் வெட்டுதல், பாடசாலை யேற்படுத்துதல், கோவில்கட்டுதல் முதலியவை நிலையாய் பரோபகாரமாய் ஏழைகளுக்குப் போஜனமளித்தல் பிராணிகளுக்கு எற்படும் துன்பத்தை நீக்குதல் முதலியன நிலையற்ற பரோபகாரமாம். இவ்வகை பரோபகாரத்தையும் மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். இது பற்றியே பெரியோர்

நீரறநன்று நிழனன்று தன்னில்லுள்
யாரறநன்று பாத்துண் பானேன்—பேரறம்
நன்று தனிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சாலவுடன்.

என்று கூறியுள்ளனர். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் தன்னலம் பாராட்டாது பிறர் பொருட்டாகவே உழைக்கும் மனிதனே எனக்குப் பிரியமானவன் என்று கூறினர். ஆதலின் நாம் ஒவ்வொருவரும் இனியேனும் பரோபகாரத்தை மறவாதும் தவறாதுஞ் செய்துவருதல் வேண்டும். அதனால் நமக்கு ஒற்றுமைவிர்த்தியாகி அன்பு பெருகி இவ்வுலகமே ஸ்வர்க்கலோகமாக மாறிவிடும். எல்லாம் வல்ல சரவணபவ ஆனந்தன் திருவருள் புரிவாராக.

குற்றங்களைந்து குணத்தை கொள்ளுதல் கற்றவர்க்குற்ற கடன்.

பழ, ச. கருப்பஞ் செட்டியார், கீழச்சிவல்பட்டி.

சுலோசனை.

இரண்டாவது அங்கம். முதலாவது காட்சி.

காலம்: இராத்திரி.

இடம்; சுலோசனா தேவியின் மாளிகையிலோர் புறம்.

(மோகத்திலும் துக்கத்திலும் மூழ்கி துன்புறும் சுலோசனை தோழி மயூராவுடன் பிரவேசம்)

சு: அப்பொழுது.

இராகம் : மாஞ்சி : தாளம் ஆதி.

பல்லவி.

கண்ணாள னென் மன்னவனை
என்னாள டைவேனோ யினி (கண்)

அநுபல்லவி.

புண்ணுகி யென் பேதை நெஞ்சம்
என்னுவி நீங்கி போகு தைய்யா ! (கண்)

சரணம்.

நாட்கள் பல கழிந்தன போல்
வேட்கை மிஞ்சி வருந்து தையோ !
நாதனை யடையாவிடில்
வேதனையான் மாய்குறேனே !

(தோழியைப்பார்த்து) அடி மயூரா ! என்ன விபரீதம் அடி !

ம: தேவி! இளவரசர் ஜயத்துடன் திரும்புவார். கவலை சிறிதும் வேண்டாம்.

சு: அடி, என் பிராணபதி திரும்பவருவாரோ, மாட்டாரோ ! அடாடா ! ஓயாதிப்படி வீணில் மனஞ்சலிக்கின்றதே ! ஐயோ ! தெய்வமே ! (முகத்திலறைந்து கொள்ளுகின்றாள்) என் பிராண காந்தன் அருகில்லாமல் சரீரஞ் சோர்வடைகின்றதே ! கண நேரந்தோறும் ஒவ்வொரு யுகமாய் வளருகின்றதே ! நானிவ்வித மான துன்ப மடைந்ததே யில்லையே ! பிராணசகி ! இனி ஒரு நிமிஷமும் என் உயிர் நில்லாது, நில்லாது ! எப்படியாவது என் உயிரை மாய்த்து விடவேண்டியதன்றி வேறு வழியில்லை. (மூர்ச்சிக்கிறாள்.)

ம; (பக்கத்திலிருந்து அவளைத் தடவிக் கொடுத்துக்கொண்டு) அம்மணி ! நீங்கள் படும் துன்பத்தைக்காண என்மனம் பதைக்கின்றதே ! உங்கள் மனதை இவ்வாறு அவலிக்கும்படி விடாதேயுங்கள். கற்றறிந்தவர்களான நீங்களே தைரியத்தைவிடுத்து மனத்தளர்ச்சியடைந்தால், என் போலியர்கள் என் செய்வது ! உங்கள் பிராணபதியான அரசகுமாரர் சடுதியில் இதோ ஜயத்துடன் திரும்ப வருவார் ; கவலையுறாதேயுங்கள்.

சு: தோழி ! ஒருவர் இறப்பது நிச்சயமென்றறிந்தும், ஔஷதங் கொடுத்து அவரைப்பிழைப்பிக்க நினைப்பது போலிருக்கிறதே, நீ எனக்குச் சொல்ல வரும் தேறுதலான வார்த்தை; காலடியோசை கேட்கிறது. போய்ப்பார் யார் என்று.

(மேகநாதன் (இந்திரஜித்) பிரவேசம்.)

மே; (தனக்குள்) போர் முனையிற் சற்று தங்கியிருப்பேனேயாயின், லக்ஷ்மணன் விடுத்த 'ஐந்திராஸ்திரம்' என்னை யெளிதில் விட்டிராது. சுலோசனையைக் காண்பதற்கில்லாமல் உயிர்நீங்கியிருக்குமன்றோ ! (பிரகாசமாய்) யார் இவண் ? மயூரா !

ம: (பரபரப்புடன் ஓடி வந்து வணங்கிக்கொண்டு கைகூப்பியபடி நின்று) சுவாமி !

மே: கஞ்சுகி! நின் தோழியும், என் பிராண சுந்தரியும் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? நான் வந்திருப்பதாய்த் தெரிவி!

ம: (மயூரா திரும்ப ஓடோடியுஞ் சென்று) அம்மா சுலோசனை! நின் பிராணபதி * ஐயத்துடன் வந்திருக்கின்றனர்.

சு: அப்படியா! (திடுக்கிட்டெழுந்து விரிந்த கூந்தலைக் கோதி முடிந்து கொண்டுவந்து) பிராணேச! நீங்களென்னைவிட்டுப் பிரிந்து சென்ற இந்த ஒரு பகலே பல பகல்களாகப் பெருக மிகுந்த துன்பமெய்தினேன். இப்பொழுது கண்களாற்கண்டது தான் தாமசம். என் துன்பமெல்லா மொழிந்து சற்று தைரியங்கொண்டேன். சென்ற காரியம் ஜயந்தானே!

மே: பிரேமகார்காமணி! போர்முனையில் என்னாலியன்றமட்டில் சமாளித்துப் போர்புரிந்து பார்த்தேன்; முடியவில்லை. மாயையைப் பிரயோகித்து என் திறமையெல்லாங்காட்டிப்பார்த்துவிட்டேன். பயன் சிறிது மிலதாயிற்று. நிகும்பிலையில் யாகமுமியற்றினேன்; சத்துருக்களின் ஹிம்சையினால் அதையும் பூர்த்திசெய்யக்கூடவில்லை. கடைசியாய் லட்சுமணன் விடுத்த 'ஐந்திரம்' என்ற அஸ்திரத்துக்குத்தப்பிப்பிழைத்து மாயையில் மறைந்து இவண் வந்து சேர்ந்தேன்.

சு: காதல! இந்தப்போரில் வெல்ல முடியாதென்று நான் சொல்லவில்லையா? எப்படியாவது எனது விருப்பத்தின்படி திரும்ப வந்து சேர்ந்தீர்களே!

(நாயகனை இறுகக் கட்டிக் கொள்ளுதல்.)

மே: பெண்மணி! நான் முன்வைத்த காலைப் பின்வைப்பேன் என்றெண்ணாதே; என் உயிர் உள்ளவரையில் போர் புரியாது விடேன், விடேன்! சத்துருக்கள் என்னை அவமதிக்காதபடி மீண்டும், நான் நாளை யுதயத்திலேயே சமர் முனையிலிருக்க வேண்டுமே! அப்படிச் செய்யாதிருந்தால் நான் சத்துருகளுக்குப் பயந்து ஒளிந்து பின்னிடைந்து போய்விட்டதா யன்றோ கருதப்படுவேன். சுத்த வீரனாகிய என்னுடைய இந்தசெய்கை வீண்பழிப்பும் இழிவுந் தருமே! எனக்கிது அழகாமோ!

சு: கண்களில் நீர்ததும்ப தழதழத்த வார்த்தையாய்) ஏற்கெனவே மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கு மென்னை, மேன்மேலும் துன்புறுமாறு செய்யவோ யிவண் வந்து முகத்தைக் காட்டிச் செல்லவந்தீர்கள், பிராணநாத! நான் சொல்லும் இன்மொழியைச் சற்றே செவிகொடுத்து கேட்கலாகாதோ?

(இன்னும் வரும்) துறையூர் மா. சுப்பராமய்யர்.

*'ஜயத்துடன்' என்று இவளாய்சேர்த்துக்கொண்டு சொல்லுகிறாள்.

மிருகாவதி

(323-ம் பக்கத் தொடர்ச்சி.)

மிருகாவதி: என் நன் மணிகாள்! இன்று வைகறையில் ஒரு மகான் என் கண்கள் முன் தோன்றினர். என்னைத் தட்டியெழுப்ப லாயினர். நான் அவரைக் கண்டு திடுக்கிட்டேன். "உனக்கேன் கவலை, என் இந்தபயம் கௌசாம்பி ராஜகுமாரன் நின்னையும் அன்னவன் மூன்று தோழன்மார்கள் நின் தோழிமார்களையும் திருமணம் புரியலாகும்" என்று மாத்திரஞ் சொல்லி வாழ்த்தி மறைந்தனர்.

* "நீலவல்லிரு ணீங்கலு நீங்குமம்
மூலயில் கனவு.........."

கண்டகனவு முற்றுற நான் உடனே துயிலெழுந்து கை கால் முகங் கழுவி, கண்ணாடி பார்த்து, நுதலுக்குத் திலதமிட்டு திருவிளக்கு நோக்குற்று பராசத்தியாம் அம்பாளை ஸ்துதித்துப் பிறகு, வழக்கம் போல் நந்தவனஞ்செல்ல நினைத்தேன். நீவிரும் வந்துசேர்ந்தீர்கள். இவணுற்றனம். நாறு தருளினின்றும் நறுமணம் வீசும் பூக்களைக் கொய்தனம். இனி நடபாவியில் நீராடி, பரமேஸ்வரியைப் பூஜித்து மாளிகை செல்வோம். என்றிவ்விதம் வார்த்தையாடிக் கொண்டு நான்கு இளஞ்சுந்தரிகளும் நடபாவியை நோக்கிச் செல்லுங்கால், அவர்கள் கண்டறியாத விநோத வேலைப்பாடுகளுடன் கூடியதோ ரழகிய பிலத்துவாரத்தைக் கண்டாச்சரிய முற்றனர். மயன் நிர்மாணமாயிருக்கலாமோ, அல்லது விசுவகர்மாவின் நிர்மாணமாயிருக்கலாமோ! நாம் தினம் தோறும் இங்ஙனம் வந்து கொண்டிருக்கையில் இந்நாள் பரியந்தம் இந்த பிலம் நமது கண்கட்கு புலப்படாமல் இன்று தோன்றுவ தென்கொல்லோ! எப்படியாயினு மாகட்டும். நாமிதற்குள் நுழைந்து இதன் விசித்திர வேலைப்பாடுகளைக் கண்டு களிப்புறுவோம் வாருங்கள் என்று அந்த பிலத்துவாரத்துக் குள் நுழைந்து சென்றனர். பிலமு மாயமா யிருந்தவிடம் தெரியாமல் மறைந்தது.

VI

எழிலின் மிக்க சிறுமிகள் நால்வரும் பிலத்துவாரத்துக்குள் புகுந்து சென்ற நாள் காலையில் அந்த அயோத்திமா நகரத்தின்கண் ஓர் நாட்காலை சூரியன் கிழக்கே உதித்தனன். அவனது பரந்த செஞ்சுடரொளிகள் தங்கக் கம்பிகள் போல் விரிந்து பள பளவென ஒளி வீசி ஜாஜ்வல்லியமாய்த் துலங்கிற்று அங்குள்ள ஆற்றின் ஜலமா

---

* நனவு போன்ற கனவு நீங்கலும், எழுந்தா இக் கதாநாயகி செய்தவாறு செய்ய வேண்டுமேயல்லாமல் மீண்டுந் துயிலலாகாது. அத்தகைய வைகறையில் காணுங்கனவு பலிதமாகு மென்பர் மேலோர்.

னது பொன்னீர் போலவிருந்தது. அந்நந்நீரில் சிறுமீன்கள் துள்ளிக்குதித்தன. தங்கத் தாம்பாளத்தில் வைரகற்கள் பொதிக்கப்பட்டாற்போல் பள பளத்து ரமணீயமாயிருந்தது. எண்ணிறந்த சோலை சிங்காரவனங்களின் காற்றும் நறுமணம் கமழும் நந்தவனத்தின் காற்றும் எழும்பி வீசி இனிமையை யூட்டிற்று.

அப்பொழுது கிருதவர்ம மகாராஜன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வழக்கம்போல் சபைக்கேகி, மந்திரியைப் பார்த்து, சுமதி! இந்த நந்நகரில் பகவான் பூர்ணவதார புண்ணிய புருஷராய்த் தோன்றி ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னர்களாய்க்கூடி, கொடிய இராவணனை முடித்து, தர்மந் தழைத்தோங்க ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்கள். இந்தப் புண்ணியபூமியில், நமது பூர்வபுண்ணிய வசத்தால் நம்மால் கூடியமட்டில் செங்கோல் செலுத்திவருகின்றனம். அக்காலத்தில் தசரதருக்கு நான்கு புத்திரர்கள் உண்டானது போல் நமக்கும் மிருகாவதி, கலாவதி, ரூபாவதி, கமலாவதி என்ற நான்கு புத்திரிகள் பிறந்திருக்கின்றனர். அந்த நால்வரும் விதேகராஜ குமாரிகள் நால்வரை மணம் புரிந்தவாறு, நமது கன்னிகாமணிகட்கும் அவர்களுடைய நட்பு கெடாதபடி நால்வர் ராஜ தநயர்கள் கிடைக்கவேண்டுமே! அவர்கட்கு விவாக யோக்கிய பருவ காலமும் சமீபித்துவிட்டதே! பூர்வத்தில் விதேகராஜரான ஞான ஜனகருக்கு லட்சுமி தேவியான சீதாதேவியார் புத்திரியாய் வந்து தோன்றியதுபோல், நமக்கும் மிருகாவதி தோன்றியிருக்கின்றனள். சீதாதேவியாரின் யோக்கியதைக் குகந்த புண்ணியசீலரான பிராணகாந்தன் கிடைக்க வேண்டுமே யென்று, ஜனகர் கன்யாசுல்கமாக சிவதனுசை ஏற்படுத்தியதுபோல், நானும், நமது கன்னிகாமணிகளை மணம்புரியத்தகுந்த ஒரே ராஜகுமாரனாவது அல்லது ஒரேயிடத்துதித்த நான்கு ராஜ குமாரர்களாவது கிடைத்தாலன்றி நமது பெண்மணிகட்குத் திருமணம் செய்வதற்கில்லையென்று. இந்த எனது தீர்மானத்தையே 'கன்னிகா சுல்கமாக' வைத்திருப்பதாய், தேச தேசாந்து மன்னவர்கட்கும் ஓலைகளை விடுத்து, சுயம்வரத்துக்கு நந்நாளும் அமைத்து, நமது தேசமெங்கும் பறை சாற்றக் கடவீர் என்று மொழிந்தான். அம்மொழியைக்கேட்ட சுமதியும்; மகாராஜனே! ஒரு ராஜகுமாரனுக்கு நமது நால்வரையும் பாணிக்கிரஹணஞ் செய்விப்பதும் யுக்தமேதான். ஒரே புமானை மணமகனாய்க் கொள்ளும் நமது பெண்கள் ஒருங்கக்கூடி சமாதானமாய் வாழ வேண்டுமே, என்பதே! என்றான்.

அமைச்சர் மொழியைக்கேட்ட அரசன் அங்ஙனமாயின், நமது பெண்மணிகளின் மனவிருப்பத்தையுங் கண்டறிவோம் அவர்களையழைப்பியுமென, அமைச்சனும், அவ்வாறேயாகட்டுமென, கஞ்சுகியொருத்தியை கன்னிகாமாடத்திற்கு அனுப்பினன்.

(இன்னும் வரும்.) துறையூர் மா. சுப்பராமய்யர்.

மார்க்கண்டன்.

(தொகுதி 1, பகுதி 12-ல் 433-ம் பக்கத் தொடர்ச்சி).

மா. (கற்பூரம் ஒற்றிக்கொள்ளுகிறான்.)

சி. பலதரம் கூப்பிட்டும் பதிலைக்காணோமே!

ய. இதோ! நான் கூப்பிடுகிறேன் பார்? என்ன செய்கிறான் பார்ப்போம். (உரக்க மேக கர்ச்சனைபோல்) ஏ மார்க்கண்டா!

மா. (சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டு திரும்புகிறான்—யமனைக் கண்டதும் கடவுளை நோக்கிப் பாடுகிறான்).

[வீடலால வாயிலாய்—மெட்டு.]

காலன் வந்தான் காக்கவேண்டும்
கங்கை கொண்ட கண்ணியா!
கால பாசம் கிட்டிடாமல்
காத்திடும் கங்காதரா!

ய. (மார்க்கண்டனைப் பார்த்துக் கோபத்துடன்) என்ன சும்மா இருக்கிறாய்? சுவாமியின் அருகில் நாங்கள் வரமாட்டோம் என்ற தைர்யத்துடனா வாளாயிருக்கிறாய்?

மா: (அதே மெட்டு.)

என்ன செய்வேன் ஏது செய்வேன்
ஏற்றிலேறும் எந்தலே!
இந்த சமயம் என்னைக்காத்து
இரட்சிக்கவேண்டுமே

ய. ஏ மார்க்கண்டா! நாங்கள் கூப்பிடுவது உன் காதில் படவில்லையா? (கோபத்துடன் பார்க்கிறான்.)

மா. (பயங்கொண்டு பாடுகிறான்.)

('முத்தி நெறியறியாத மெட்டு'.)

——ஐஐயோ ஐஐயோ அதுபாராய் அதுபாராய்
மெய்யாக உனை நம்பி வந்து பூசித்தேனே
சங்கரனே சங்கரனே சம்போ கங்காதரனே
சங்கரனே சங்கரனே சம்போ கங்காதரனே.

ய. பாடினது போதும்.—பூஜை புரிந்தது போதும்—வா! எழு! புறப்படு.

மா. (மெதுவாக முழந்தாளிட்டபடியே)

திங்கள் சடை கொண்டோனே
திருலோகங்கட்கு நாதனே (நமஸ்கரித்து)
உங்கள் பாதம் விழுந்தேன்
உவந்து ஆதரியுமே.

ய. (பற்களை நர நர வென்று கடித்து) அடா பாவி!

மா. (முழந்தாளிட்டு).

அண்டினோரைக் காருமே
ஓ அம்பிகை மணாளனே (நமஸ்கரித்துப் பின் எழுந்து)
வந்த காலனைத் தள்ளி
வரவேண்டும் காத்திடவே.

ய. டேப்! இன்னும் என்ன சும்மா இருக்கிறாய்? சிவனை நம்பினால் சித்தியடையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனை நீ! அந்தச் சாம்பலாண்டி எனக்கு எம்மாத்திரம்? வெட்கங் கெட்டு வேடப எச்சிலை உண்டவனும், புட்டுக்கு ஆசைப்பட்டுப் பாட்டியின் காலில் விழுந்தவனுமான, பரமசிவனா உன்னைக் காப்பாற்றப் போகிறான்?——மரியாதையாக வந்துவிடு. அந்தச் சடையாண்டியால் ஒன்றும் செய்யமுடியாது. என்பதை நம்பு. அடா குழந்தாய்! அவன் பித்தன் என்பதை மறந்துவிட்டாய் போலும்.

மா. (பரபரப்புடன் எழுந்து)

வேதனே சரணம்!	வேந்தனே சரணம்!
வானவா சரணம்!	மெய்பனே சரணம்!
நாதனே சரணம்!	நீதனே சரணம்!
நித்தனே சரணம்!	நிமலனே சரணம்!
போதனே சரணம்!	பூதனே சரணம்!
பசுபதி சரணம்!	பித்தனே சரணம்!
[விழுந்து] பாதமே சரனம்!	பாப்பணி சரணம்!
பரமனே! ஏகனே!	பாபியேன் சரணமே!

ய. அடா துன்மார்க்கப் பயலே! நான்கு நாழிகையாக நான் இங்கே காத்துக்கொண்டிருக்க நீ வராமல் சும்மா இருப்பது உன் சாமார்த்தியமா! இதோ நீ வராவிட்டால், நீ நம்பின அந்தச் சிவனையும் உன்னையும் சேர்த்துப் பாசத்தினால் இழுக்கிறேன் பார். நான் காலன் என்பதையும் அந்தகன் என்பதையும் அறியாயோ நீ?

மா. (முழந்தாளிட்டுக்கொண்டு).

ஆ ஆ ஆ என்ன செய்வேன்!
ஐயனே ஏ ஐயனே! (மார்பைத்தொட்டு)
மெய் பதறுதையனே!
மெய்யனே ஓ தூயனே!

(இடது கையைக் கிளப்பி) பாசத்தினாலேகட்ட (அக்கையினால் சிவனைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு)

பாபி துணிந்தனனே!

(வலது கையைக் கிளப்பி)

ஈசன் என்பதை அவன்

(வலது கையினுல் சிவனை முன்புறமாய்க் கட்டிக்கொண்டு)

எண்ணவில்லை அரசே! (கண்களை மூடிக்கொள்ளுகிறான்)

ய. ஏ சித்ரபுத்ரா! இந்த பையன் என்ன துள்ளுகிறான் பார்! ஈசன் ஈந்த ஆண்டு பத்தாறும் ஆகிவிட்டதனுல் இவனுக்கும் ஈசனுக்கும் என்ன சம்மந்தம்? எமபுரிக்கு வரவேண்டிய இந்தச் சண்டாளத் துரோகியைத் தடுக்கச் சம்புவால் முடியுமோ!

(தொடரும்.)

லால்குடி. சே கந்தசாமி ஐயர்.

ரஞ்சிதபோதினி 2-வது மலரின் ஓர் வேண்டுகோள்.

நம்சகோதர சகோதரிசாள்!

சென்னையினின்றும் வெளிவரும் பல்லாயிரம் சஞ்சிகைகளில் ரஞ்சிதனும் ஒருவனுகத் தோற்றித் தன் முதலாம் மலரை இடையருது முடிவு பெற்று இவ்விரண்டாம் மலரைக் கைக்கொண்டிருப்பதால் சகோதர சகோதரிகாள் நாமனைவரும் சென்ற 1-ம் மலரைத் தடையருது ஏற்றுக்கொண்ட வண்ணம் இவ்விரண்டாம் மலரையும் நாமனைவரும் என்று மென்மேலும் ரஞ்சிதனை உலகெங்கும் கீர்த்தி பெருகும்படி ஸ்ரீ கயிலயங்கிரி வாசரை வேண்டுவோம்.

இவ்ரஞ்சிதனை நிலைநாட்டிய பத்திராதிபர்களுக்கும் பிரசுரகர்த்தாக்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனம் அளிப்பதுடன் அவர்களுக்கு எங்களாலின்ற புதிய சந்தாதாரர்களைச் சிபாரிசு செய்து கொடுக்கவும் முயலுவோம்.

நம் எனைய சந்தாதாரர்களாகிய சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த வந்தனம் அளிப்பதுடன் ரஞ்சிதனை முன்னேற்றமடையப்பண்ணும் விஷயத்தில் நானும் தங்களுக்குள் ஒருவனுக இறைவனை இறைஞ்சுகின்றனன்.

இவ்ரஞ்சிதன் மென்மேலும் விருத்தியடைந்து தனக்குள் இதிகாசம், புராணம், காவியம், கதைகள், முதலியவைகளைப் புனைந்து மாதந்தோறும் வெளிவரும் பொருட்டு எம்பெருமான் கிருபை பாலிப்பாராக!

வே. சி. முத்தையா பிள்ளை,

தமிழ் அபிவிர்த்தி.

வினோத விஷயங்கள்.

(467-ம் பக்கத் தொடர்ச்சி).

அவன் சாப்பிட உட்கார்ந்த இடத்திற்கு மேலே ஒரு பரணிலிருந்து அவன் உணவு உண்ணும் இலையிலும் அவன் தலைமேலும் உமி உதிர்ந்து கொண்டிருந்தது. அதைச் சகிக்க முடியாமல் "அடி, தலையில் உமி என்றான். உடனே அவனுடைய மனைவி அவன் தலையில் காரிக்காரி உமிழ்ந்தாள்.

5 கள்ளு குடிப்பவர்கள்.

கட்டை என்பவனும் குட்டை என்பவனும் ஒரு சாராயக்கடைக்குச் சென்று கள்குடித்துவிட்டுத்திரும்பி வரும்பொழுது பின்வருமாறு சம்பாஷிக்கலாயினர்.

கட்டை: அண்ணே, அண்ணே ஒரு பாட்டுப் பாடேண்ணே கேக்கலாம் பார்ப்போம்.

குட்டை: தில்லாலங்கடி

தில்லாலங்கடி தில்லாலே............

கட்டை: அண்ணே அண்ணே அது வாணண்ணே வோரே ப்பாட்டு பாடுண்ணே.

குட்டை: ஆத்துத்தண்ணீ, ஊத்துத்தண்ணீ.
எல்லாரும் குடிக்குந் தண்ணீ,
கட்டையுங் குட்டையுங் குடிக்குந் தண்ணீ,
நேத்தியான கள்ளுத்தண்ணீ, ஈ ஈ ஈ

கட்டை: பேஷ் பேஷ் லபே லபே நல்லாக்குதுண்ணெ

குட்டை: "லபே லபே ஜாண ஆ ஆ........." போதும் போதும்.

கட்டை: வாண்ணே ஊட்ட போவலாம்.

6. புஸ்தகம் ஹஸ்தபூஷணம்.

ஒரு தாய் தன் மகன் பள்ளிக்கூடத்தில் நன்றாய்ப்படிக்காததைக்கண்டு அவனை ஒரு நாள் நன்றாய் உதைத்தாள்.

(இன்னும் வரும்). V. Krishnasamy.

சேலம் ஜவுளி தினுசுகள். விலை நயம்.

வாங்க விருப்ப முள்ளவர்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் உள்நாடுகளுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏராளமாக சப்ளை செய்யப்பட்டுவருகின்றன. பட்டுநூல் சரிகை கலந்த பலமாதிரி ஜவுளிதினுசு விலைவிவா கேட்லாக் இனாம் உடனே எழுதுங்கள்.

நா. பாலு அய்யர்,

சேவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

அஹிம்சாதர்மோபதேசியும், அவதாரபுருஷரும்,
பரம கருணாநிதியும், பாரத மக்களின்
முன்னேற்றத்தை யெடுத்துக் கூறியவரும்,
உலகத்தையும் சுதந்தரத்தையும் மறந்து உறங்கிக்
கொண்டிருந்த இந்தியர்களை விழிக்கச்செய்து
சாத்வீக தர்மத்தைக் கைக்கொள்ளச் செய்தவரும்
கலியுகத்தில் கடவுளை போன்றவரும்,
சர்வதேசத்தாராலும் போற்றத் தகுந்தவருமான
மகாத்மா காந்தியடிகள்
1924௵ பிப்ரவரி௴ 4௳ இரவு 1-மணிக்கு
சிறையினின்றும் விடுவிக்கப்பட்டார்
என்னும் நற்செய்தியைக்கேட்டு
நாம் சந்தோஷிக்கிறோம்.

V. R. Gaekwar.

RAJA RAJESWARY AND CO.

Snuff Emporium, Rayapuram Post, Madras.

நண்பர்களே! எங்களின் உயர்தரமான பட்டணம் பொடியை ஒரு விசை தருவித்து உபயோகித்து பாருங்கள் இது நல்ல மாதிரியான புகையிலையைக் கொண்டு முதல்தரமான நெய்யின் உபயோகத்தினால் செய்து ஒரு வி. பி. மூல்யமாய் அனேகருக்கு அனுப்பி வருகிறோம் தயவு செய்து ஒருதரம் சுல்ப ஆர்டர் கொடுத்து வரவழைத்து பார்த்து இதன் குணத்தை அறிந்து சம்மதமாயின் மறு ஆர்டர் தேவையான அளவுக்கு கொடுக்க எதிர் பார்க்கிறோம்.

பாக்கிங்	வி. பி. சார்ஜி உள்பட	வீசை 1-க்கு	கிரயம்	ரூ.	4-5-0
,,	,,	,,	அரைக்கு	,,	2-8-0
,,	,,	,,	காலுக்கு	,,	1-2-0
,,	,,	,,	சேர்-க்கு	,,	1-0-0

ரயில்வே சார்ஜ் நீங்கலாக வீசை 1-க்கு கிரயம் ரூ. 3-10-0

ஜே ஆர் நறுமண மூக்குத்தூள்

புட்டி 1-க்கு விலை அணா 4. டஜன்-க்கு விலை ரூபா. 2-4-0.

ராஜராஜேஸ்வரி அண்டு கம்பெனி,

பொடி வியாபாரி இராயபுரம் போஸ்டு மதராஸ்